Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 20 ஹிஜ்ரி 1426 துல்ஹஜ் 03 (04.01.2006) புதன்கிழமை இதழ் 96

Dialog டயலொக்

kit

எந்நேரமும் என்னுடன்....

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் மற்றும் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் SIM இணைப்புக்களையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள், துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகளுக்கும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்திலிருந்தும் ஒருசில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Sri Murugan
Tele Communication & Agency
Post Office.
303, K.K.S. Road, Jaffna.

T.P: 021 222 5392,
Fax: 222 3214
E.Mail: srimurugan@eureka.lk

## புலிகளின் விமானம் பறந்தால் சுட்டுவீழ்த்த தயங்கமாட்டோம்!

### எச்சரிக்கிறார் விமானப்படைத் தளபதி

கொழும்பு —

இலங்கை வான்பரப்பில் விடுதலைப் புலிகளின் விமானம் பறந்தால் சுட்டு வீழ்த்த தயங்க மாட்டோம் என விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்சல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது -

புலிகள் விமான ஓடு தளத்தை அமைத்துள்ளார்கள் என்பதையும், இரண்டு விமானங்கள் வைத்துள்ளார்கள் என்று கூறுவதையும் நாம் வேடிக்கையாகப் பார்க்கவில்லை.

இலகுரக விமானங்களை விடுதலைப் புலிகள் தயார் நிலையில் வைத்துள்ளதாக உறுதியான தகவல் கிடைத்துள்ளது. மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் இராண்டாவது விமான ஓடுதளம் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்டு வருவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

விடுதலைப் புலிகளின் விமானங்கள் இலங்கை வான் பரப்பில் பறக்க முயன்றால் இராணுவத்தின் விமான எதிர்ப்புப் படை அதைச் சுட்டு வீழ்த்தும். இது தொடர்பில் விமானப் படைத் தரப்பு ஆழமாக விவாதித்துள்ளது. தேவைப்படுமாயின் இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

## இராணுவத்தினரின் கிளைமோர் தாக்குதலில்

# புலிகளின் வவுனியா மேற்கு அரசியற் பொறுப்பாளர் வீரச்சாவு

கிளிநொச்சி —

மன்னாரில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் போராளி ஜெயானந்தன் மற்றும் நாட்டுப்பற்றாளர் வினோத் ஆகிய இருவரும் வீரச்சாவடைந்தனர்.

மன்னாரில் விடுதலைப் புலிகளின் முள்ளிக்குளம் பகுதி வலயன்கட்டுப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்ற போது விடுதலைப் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிய இராணுவத்தினர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மேற்கு பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் மேஜர் ஜெயானந்தன் நேற்று இராணுவத்தினரின் கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாகிய வவுனியா வலயன் கட்டு - முள்ளிக்குளம் வீதியில் மோட்டார் சைக்கிளில் (12 ஆம் பக்கம் பார்க்க)



# மாணவர்கள் கொலையை அடுத்து திருமலையில் இயல்புநிலை பாதிப்பு!

திருகோணமலை —

திருகோணமலை கடற்கரை வீதியில் நேற்றுமுன்தினமிரவு 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று திருகோணமலையில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதுடன், பாடசாலைகளுக்கு மாணவர்களும், அலுவலகங்களுக்கு ஊழியர்களும் செல்லாததால், அவையனைத்தும் இயங்கவில்லை.

இந்தப் படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து எந்தவொரு அமைப்பும் அழைப்பு விடுக்காதபோதிலும், மக்களால் இந்தக் கதவடைப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, மாணவர்களின் படுகொலையைக் கண்டித்து இன்று பூரண கதவடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)



## இருவேறு தாக்குதல்களில் 4 படையினர் படுகாயம்!


யாழ்ப்பாணம் —

யாழ் நகரப்பகுதியில் இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் இராணுவ லெப்ரினன்ட் தர அதிகாரி ஒருவரும், சிப்பாய் ஒருவரும் காயமடைந்து பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 11.30 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்றது.

காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பலாலி (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ வன்முறையை கண்டித்து சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம்!



சென்னை —

தமிழர்கள் மீதான இராணுவ வன்முறையைக் கண்டித்து மற்றும் நடேசன், சிவராம் போன்ற ஊடகவியலாளர்களை படுகொலை செய்ததைக் கண்டித்தும் இலங்கை அரசுக்கு எதிராக சென்னையில் விடுதலைச் சிறுத்தைகள் இயக்க பொதுச்செயலாளர் தொல். திருமாவளவன் தலைமையில் நேற்றுக்காலை 11 மணிக்கு மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் துணைத்தலைவர் சி.ஆர்.பாஸ்கரன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகி வழக்கறிஞர் அதியமான், கவிஞர் அறிவுமதி, இயக்குனர்கள் சீமான், புகழேந்தி, தங்கராசு மற்றும் தமிழ் தமிழர் இயக்கத்தின் தலைவர் தியாகு, தமிழ் தேசப் பொதுவுடமைக் கட்சியின் நிர்வாகி அ.பத்மநாபன், உலகத் தமிழர் பேரமைப்பின் பொதுச் செயலாளர் பத்மநாபன், உலகத் தமிழ்மொழி அறக்கட்டளை நிர்வாகி முனைவர் தமிழப்பன், புலவர் கி.த.பச்சையப்பன், மக்கள் புதிய தமிழகத்தின் நிறுவுனர் துரையரசன் உட்பட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண் டனர்.

இந்திய பேரரசே! தமிழினத்தை அழிக்கும் சிங்கள இன வெறியர்களுக்கு சிவப்புக் கம்பளம் விரிக்காதே என்ற பாரிய பதாகையில் புங்குடுதீவு தர்சினியின் சடலம் கிடத்தப்பட்ட புகைப்படமும், அவரது உறவினர் கதறியழும் புகைப்படமும் வைக்கப்பட்டு ஈழத்து அவலத்தை எடுத்துச் சொல்லியது.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்தும் சிங்களக் காடையர்களின் இன வெறிப் படுகொலையைக் கண்டித்தும் கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

எங்கள் தர்சினிக்கு வீர வணக்கம்!

எங்கள் ஐயா பரராஜசிங்கத்துக்கு வீரவணக்கம்!

திருகோணமலையில் கொல்லப்பட்ட மாணவர்களுக்கு வீரவணக்கம்!! (12 ஆம் பக்கம் பார்க்க)

# பூசகர் சுட்டுக்கொலை!

வாழைச்சேனை —

மட்டக்களப்பு - கிரான் பிரதேசத்தில் உள்ள ஆலையடிச் சேனையில் இந்து ஆலய பூசகரான செல்லத்தம்பி விசாகரட்ணம் (வயது 53) நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

சந்திவெளி - கண்ணகி அம்மன் ஆலயத்தில் பூசகராக கடமையாற்றி வந்த இவர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு தனது இருப்பிடத்தில் உறங்கிக் கொண்டிருந்தவேளை அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

சுட்டுக்கொல்லப்பட்டவரின் சடலம்செங்கலடி வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அவர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கான காரணம் வெளியாகவில்லை.

# மக்களின் தாக்குதல்களில் காவலரண்கள் அழிந்தன!



திருகோணமலை —

திருகோணமலை நகரப் பகுதியில் கடற்படையினரின் காட்டுமிராண்டித்தனமான செயற்பாட்டை பொறுக்க முடியாத பொதுமக்கள் கடற்படையின் ஐந்து காவலரண்களை முற்றாக இடித்து அழித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தில் (12 ஆம் பக்கம் பார்க்க)




ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்

EXPOAiR

021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...



# அரசு வன்முறை - அடாவடித் தனத்தை கைவிட்டு ஆக்கபூர்வமாக சிந்தித்து செயற்பட வேண்டும்!

## யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம் —

நேற்று முன்தினம் இரவு திருகோணமலையில் மொறட்டுவப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உட்பட 5 மாணவர்கள் மிகவும் கொடூரமான முறையில் சிறீலங்கா படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என- யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் திருமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதுடன் -

கடந்த சில வாரங்களாக சிறீலங்கா இராணுவத்தினர் மாணவர்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல்களையும், அடாவடித்தனங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலமையானது மிகவும் பாரதூரமான சூழலை நோக்கி தமிழர் தாயகப் பிரதேசம் செல்வதையே எடுத்துக் காட்டுகின்றது.

இன்று இளைய சமூதாயத்தின் மீதும், கல்விச் சமூகத்தின் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்கள் பாரிய யுத்தத்துக்கே வழிவகுக்கும். இதனை உணர்ந்து பதவியேற்றுள்ள புதிய அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதை விடுத்து - வெறுமனே குழு அமைத்து விசாரணை என்ற போர்வையில் கண்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதை நிறுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், பதவியேற்றுள்ள புதிய இராணுவத் தளபதி அவர்கள் கடந்த மாதம் புங்குடுதீவில் படுகொலை செய்யப்பட்ட யுவதியை பற்றி கருத்துத் தெரிவிக்கையில் அந்தப் படுகொலையை கடற்படை தான் செய்தாலும் மக்கள் எப்படி கேள்வி கேட்பது என்று கூறியுள்ளார். இக்கருத்தானது தமிழ் பேசும் மக்கள் மனங்களில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இக் கூற்றானது ஒரு பொறுப்பற்ற தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

எனவே வன்முறைகளையும், அடாவடித்தனங்களையும் கைவிட்டு அப்பாவி மக்களை பலிக்கடாவாக்காது ஆக்கபூர்வமாகச் சிந்தித்துசெயற்படுத்துவதன்மூலமே இந்த அசாதாரண சூழலைத் தவிர்த்து இயல்பு நிலையை இனிவரும் காலங்களில் இலங்கைத் தீவில் ஏற்படுத்த முடியும் என்பதை கூறிவைக்க விரும்புகிறோம் என்றும் அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மரவேலை பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம் —

யாழ்பாணம், சுன்னாகம் தொழில்துறைத் திணைக்கள மரவேலைப் பயிற்சிப் பாடசாலைகளில் உலகவங்கி நிதித்திட்டத்தில் நெகா்ப் வீடமைப்புத்திட்ட அனுசரணையுடன் பயிற்சியை நிறைவுசெய்த பயிலுனர்களுக்கான சான்றிதழ் மற்றும் சிறு உபகரணத் தொகுதி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே இந்நிகழ்வுக்கு பயிலுநர்களை தவறாது உரிய நேரத்துக்கு சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட தொழில்துறைத் திணைக்கள மாவட்ட முகாமைத்துவ உதவியாளர் அறிவித்துள்ளார்.

# தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களை நிறுத்துவதற்கு சர்வதேசம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்!

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம் —

தமிழ் மக்கள் மீது இராணுவத்தினர் திட்டமிட்டு நடத்திவரும் தாக்குதல்கள், படுகொலைகள் மற்றும் பெண்கள் மீதான பாலியல் பலாத்கார முயற்சிகளை உடன் நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது நடத்திவரும் வன்முறைகள் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

வடமராட்சி மாலுசந்திப் பகுதியைச்சேர்ந்த இரு பெண்கள் தமது வீடு இருந்த பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீட்டிற்கு வெளியில் பலர் காவலுக்கு நிற்க சிலர் வீடிற்குள் நுழைந்து தம் மீது பலாத்காரம் செய்ய முயற்சி செய்ததாகவும், அவ்வேளை அவர்களுடன் போராடி தப்பித்தோம் எனவும் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தனர். இப்பாலியல் வன்முறை முயற்சி மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

யாழ்.குடாநாடு முழுவதும் அண்மைக்காலமாக இடம்பெறும் இராணுவ வன்முறை மூலம் தமிழ் மக்கள் அச்சத்துக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். குறிப்பாக பெண்களும், குழந்தைகளும் பயப்பீதி நிலைக்குள்ளாக்கப்படும் ஆபத்து உருவாகியுள்ளது. மனிதாபிமானத்தில் அக்கறையான அனைவரும் இதனை கண்டிக்க வேண்டியது முக்கியமானது. கண்டிப்பதோடு இந்த நிலமையை மாற்றுவதற்கு தம்மாலான அத்தனை முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டியது முக்கியமானது.

புங்குடுதீவைச் சேர்ந்த தர்ஷினி என்ற பெண் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டது தமிழ் பெண்களின் மனதில் ஆழமான ஈட்டி பாய்ச்சிய ஒரு சம்பவம். அதில் இருந்து மீள முடியாமல் அவர்கள் தவிக்கின்றார்கள்.

தமிழ் சமூகத்தால் தமிழ் பெண்கள் மிகவும் பக்குவமாக நோக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இத்தகைய வல்லுறவுகள், அவமதிப்புக்கள் இடம்பெறுவதை தமிழ் சமூகம் ஒரு போதும் பொறுத்துக்கொள்ளமாட்டாது. இது தமிழ் இளைஞர்களையும் ஆத்திரமடையச்செய்து வன்முறைக்குள் தள்ளிவிடுகின்றது.

இந்நிலையில் இராணுவ ஆக்கிரமிப்புக் கரங்களை மேலும் மேலும் இறுக்குவது தமிழ் பெண்களை ஒரு நோய் நிலைக்கும், ஓர் பழிவாங்கும் உணர்ச்சியுடன் வேகம் கொள்வதற்கும் தள்ளிவிடும். இது கட்டுப்படுத்தப்பட முடியாத வன்முறைக்கு வழி வகுத்துவிடும். எனவே உடனடியாக இராணுவ பிரசன்னத்தை நீக்கி மக்களின் இயல்பான வாழ்க்கைக்கு வழிவிடுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்த விரும்புகின்றேன்.

தற்போது மீண்டும் மேற்கிளம்பி வரும் வன்முறைச் சூழலின் ஆபத்தை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்த வன்முறைச் சூழலைத் தணிப்பதற்கு தமிழ் மக்கள் குடியிருப்புப்பகுதிகளில் இருந்து இராணுவ பிரசன்னத்தை உடனடியாக நீக்க அரசாங்கம் முயற்சி எடுப்பதற்கு சர்வதேச சமூகம் தூண்ட வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இராணுவத்தினரின் அடாவடித்தனங்களை நிறுத்த கண்காணிப்புக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்

யாழ்ப்பபாணம் —

தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் நெருக்கடிகளை முடிவுக்குக் கொண்டுவர போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினர் திட்டமிட்டு நடத்தி வரும் படுகொலைகள், அப்பாவி மக்கள் மீதான தாக்குதல்கள், பாலியல் பலாத்கார முயற்சிகள் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக யாழ்ப்பாணக்குடாநாட்டில் இராணுவத்தினரால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறைகளாலும், கைதுகள், சித்திரவதைகள் என்பவற்றாலும் மக்களின் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இருபத்தைந்துபேர் படையினரால் கைது செய்து மறைத்து வைக்கப்பட்டுள்ளனர். பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். டிசம்பர் மாதம் மட்டும் இருபத்தைந்து அப்பாவிப் பொதுமக்கள் படையினரால் சுட்டுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஐயாயிரத்துக்கும் அதிகமான பொதுமக்கள் வீதிகளில் பயணம் செய்யும் போது காட்டுமிராண்டித்தனமாக அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர்.

கடற்தொழிலாளர்கள் மீது கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. வடமராட்சியின் பல பகுதிகளிலும், மாதகல் பகுதியிலும் கடற்தொழிலுக்கு செல்லவிடாது படையினர் தடுத்துள்ளதுடன், கடலுக்குச்சென்றால் சுட்டுக் கொல்லுவோம் என எச்சரித்தும் உள்ளனர்.

இதனால் பல்லாயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. படையினரின் இத்தகைய கெடுபிடிகளால் வருமானம் ஏதும் அற்ற நிலையில் வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறை கடற்கரையோரங்களில் வாழும் மீனவர்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளுக்குச்சென்று குடியமரும் நோக்கில் தமது படகுகளையும், கட்டு மரங்களையும் எடுத்துச்செல்ல முற்பட் போது படையினர் தாக்கியுள்ளனர். படகுகள், கட்டுமரங்களை எடுத்துச்செல்ல முயன்றால் சுட்டுக்கொல்லுவோம் என மிரட்டியுள் ளனர்.

சுனாமியால் உயிர்களையும், உடமைகளையும் இழந்த மீனவர்களுக்கு அரசு எந்தவிதமான உதவிகளையும் வழங்காத நிலையில்- தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உள்ளிட்ட சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடனேயே அந்த மக்கள் படகுகளை பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறானதொரு நிலையில் படையினரின் இந்தக் கெடுபிடியால் மீனவர்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளையும், ஏனைய சட்டங்களையும் மீறும் வகையில் படையினரால் மேற்கொள்ளப்படும் கெடுபிடிகளை முடிவுக்குக் கொண்டுவரவும், மீனவர்கள் சுதந்திரமாகக் கடற்தொழிலில் ஈடுபடவும், தாம் விரும்பும் இடங்களுக்குப் படகுகளை எடுத்துச் செல்வதற்கும் நடவடிக்கைகளை எடுக்கும் வண்ணம் வேண்டுகின்றேன் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருகோணமலையில் மாணவர்கள் மீதான தாக்குதல்; யாழ்.உயர்தொழில்நுட்ப நிறுவன ஒன்றியம் கண்டனம்!

யாழ்ப்பாணம் —

திருகோணமலை பெரிய கடற்கரை வீதியில் மாலை வேளை பல்கலைக்கழக மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தை யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக வெளியிட்ட கண்டன அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம்பெற்ற பல்கலைக் கழக மாணவர்கள் மீதான படுகொலையானது ஒட்டுமொத்த தமிழ் மாணவர்களையும் விரக்தியுறச் செய்கின்றது.

சாதாரணமாக பல்கலைக்கழக மாணவர்களை படுகொலை செய்த செய்தியானது ஒட்டுமொத்த தமிழ் மாணவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. இவ்வாறு அப்பாவிகளை கொலை செய்வதன் மூலம் தமது கொலைவெறியைத் தீர்த்து தமிழ்ச் சமூகத்தின் எதிர்காலக் கல்விமான்களை இல்லாதொழித்து, தமது இனத்தின் அடிமைகளாக்கலாம் என்று இனவெறி ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளார்கள்.

அன்று யாழ்.பல்கலைக்கழக சமூகம் கொடூரமாகத் தாக்கப்பட்டது. அதற்கு அவர்கள் இராணுவத்தினரைத் தாக்கினார்கள் என்று மீண்டும் பொய்ப்பிரசாரம் செய்தது இனவெறி பிடித்த இராணுவமும், அரசும் இன்று அப்பாவி மாணவர்களைக் கொலை செய்து தங்களைத் தாக்க வந்தவர்கள் என்று மீண்டும் பொய்ப் பிரசாரம் அவிட்டுவிடப்பட்டுள்ளது.

பேனாவைத் தூக்கும் கைகள் போர்க்கருவிகளைத் தூக்காது என்று பகல் கனவு காண்கிறான் பகைவன். மாணவர்கள் எழுச்சி கொண்டால் எந்தப் படையும் மண்டியிட வேண்டி வரும் என்பதை இத்தருணத்தில் ஞாபகப்படுத்திக் கொள்கின்றோம்.

இந்த படுகொலையை வன்மையாகக் கண்டிப்பதோடு, சர்வதேச சமூகம் இராணுவத்தின் இந்த இனவெறிப் பயங்கரவாதத்தை உடனடியாக வெளிக்கொண்டு வந்து தகுந்த தீர்வினை பெற்றுத்தரவேண்டும் என்றும் கோரிநிற்கின்றோம் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழினப் படுகொலைகள் தங்கள் பசிக்கு விருந்தெனில் முழு இலங்கையும் தீப்பற்றும் என அரசு உணரவேண்டும்

## உயர்கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் —

இலங்கையில் பதவிக்கு வந்திருக்கும் ஜனாதிபதியும், புதிய இராணுவத்தளபதியும் யதார்த்தத்தையும், இலங்கையின் இன்றைய நிலைமைக்கு யார் காரணமென்பதையும் மறந்து மீண்டும் தமிழ்மக்கள் மீதும், மாணவர்கள் மீதும் தமது இனவெறியை கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் தாக்குதல்களுக்குஎதிராகவும், படுகொலைகளுக்கு எதிராகவும் யாழ். குடாநாட்டுச் சமூகம் அரச பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுதமது எதிர்ப்பைக்காட்டி, நிலைமை வழமைக்குத் திரும்பிய அன்றே திருகோணமலையில் வைத்து எமது மாணவ உடன்பிறப்புகள் படையினரால் வஞ்சகமாக படுகொலைசெய்யப்பட்டுள்ளார்கள்.

இச்செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என -யாழ் மாவட்ட உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அமையம் திருமலை மாணவர் படுகொலை குறித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மேலும்-

மதிக்கப்படவேண்டிய மாணவர் சமூகத்தின் மீது தரப்படுத்தல் என்ற வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட போது அவர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். இன்று மக்களே ஆயுதப்பயிற்சி பெறும் நிலை ஆட்சியாளர்களாலும், ஆக்கிரமிப்புப் படைகளாலும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அனைத்தையும் செய்து விட்டு தமது தமிழின அழிப்பை நியாயப்படுத்துவதற்காக புதிய இராணுவத்தளபதி பயிற்சி பெற்ற மக்களை எவ்வாறு மக்களென்று கூறுவது என கேள்வி எழுப்புகின்றார்.

புங்குடுதீவில் இளம் பெண்ணை தனது பட்டாளம் பாலியல் படுகொலைக்கு உட்படுத்தினால் அதனைக் கேட்க மக்கள் யார் எனறு கேள்வி எழுப்புகிறார். ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. யார் என்னசொன்னாலும் தமிழினத்தை அழிப்பது என்ற தமது முடிவில் ஜனாதிபதியும், இராணுவத் தளபதியும் தெளிவாகவே உள்ளார்கள். அதனைச் செய்தும் வருகிறார்கள் என்பதே அதுவாகும்.

தனது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட படைகளை வைத்துக்கொண்டு தமிழ் மக்களையும், புலிகளையும் அழிப்பேன் என கூளுரைக்கின்ற இராணுவத்தளபதிக்கு ஒரு வேண்டுகோள்! ஒரு லட்சம் படைகளை வைத்துக்கொண்டு உங்களால் கொழும்பை பாதுகாக்க முடியுமா? என கேள்வி கேட்கிறோம். நாம் யுத்தத்தினை வெறுக்கின்றோம். நீங்கள் வரவேற்கிறீர்கள். யுத்தம் தான் தங்கள் இறுதி முடிவு என்றால், தமிழினப் படுகொலை தான் தங்கள் பசிக்கு விருந்தென்றால், இலங்கைத்தீவு தீப்பற்றும் இதனை யாராலும் தடுக்கமுடியாது. இவ்வுண்மை நிலை உணர்ந்து முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தங்கள் வீரர்கள் யாழ். குடாவில் மக்கள் மற்றும் மாணவர்களின் முற்றுகைக்குள் என்ற யதார்த்தத்தை உணர்ந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்று அதன்படி செயற்பட்டாலே விபரீதம் தடுக்கப்படும்.

இல்லையேல் மக்களுடன் இணைந்து, மக்கள்படை, மாணவர் படை என நாம் போராடத் தயாராகவே இருக்கிறோம் என்ற செய்தியை தங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். உடனடியாக மக்கள் மீதான, மாணவர் மீதான படுகொலையை நிறுத்துங்கள் எனவும் எச்சரிக்கப்பட்டள்ளது.

# மூன்று பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

கிளிநொச்சி —

விடுதலைப் புலிகளின் தடுப்புக்காவலில் உள்ள பொலிஸார் மூவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்தமைக்காக கைதுசெய்யப்பட்ட மூன்று பொலிஸார் மீதான விசாரணை நேற்று கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றில் நடைபெற்றது.

விசாரணைகளின் பின்னர் மூன்று பொலிஸாரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# அனுசரணை பணியில் இந்தியா; பாட்டாளி மக்கள் கட்சி எதிர்ப்பு!



சென்னை—

நோர்வே அரசுக்கு பதிலாக இந்தியாவை சமாதான முயற்சியின் அனுசரணையாளராகச் செயற்பட வைக்கும் முயற்சிக்கு பாட்டாளி மக்கள் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

விழுப்புரம் தைலாபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அக்கட்சியின் உயர்நிலை நிர்வாகக் குழு மற்றும் பொதுக் குழுக் கூட்டங்களில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக் கூட்டங்களுக்கு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டொக்டர் ராமதாஸ் தலைமை வகித்தார்.


அமைதி முயற்சிகளில் இந்தியா பங்கேற்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கோருவதன் மூலம், எதிர்காலத்தில் எதுவித பலனும் கிடைக்கப் போவதில்லை. போர் மேகங்கள் சூழ்ந்திருக்கக் கூடிய இலங்கையில் அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு நோர்வேக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்களின் நலன் கருதியே இந்திய அரசாங்கம் செயற்பட வேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் எதுவித இராணுவ உதவியையும் இலங்கைக்கு இந்திய அரசு வழங்கக் கூடாது. சிங்களவர்களுக்கு சமமான உரிமைகளை தமிழர்களுக்கும் அளிக்கக் கூடிய இறுதித் தீர்வு இலங்கையில் உருவாக்கப்பட வேண்டுமென்றும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு இராணுவ உதவியை இந்திய அரசாங்கம் வழங்காதாம்!

## கருணாநிதி கருதுகிறார்

சென்னை—



இந்திய அரசு இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்காது என்றே தான் கருதுவதாக தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் நேற்று ஜனநாயக முற்போக்குக் கட்சிகளுடன் கலந்து ஆலோசித்த பின்னர் செய்தியாளர் கள் மத்தியில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தி.மு.க.வெளிநாட்டுப் பிரச்சினைகளில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் நிலையை ஏற்றுக் கொண்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களை எந்தத் துன்பத்துக்கும் உட்படுத்தக்கூடாது என்பது தி.மு.கவின் கொள்கையாகும். இந்த நிலையில் இலங்கைக்கு இராணுவ உதவி அளிப்பது தவறாகும் எனத் தெரிவித்தார்.

பொதுவாக தி.மு.க. இலங்கைப் பிரச்சினைபற்றிப் பேசுவதைப் பல ஆண்டுகளாகத் தவிர்த்து வந்தாலும் இலங்கைத் தமிழ்மக்களுக்கு எதிரான விடயங்களில் தாங்கள் என்றும் அவர்கள் நலனுக்கு எதிரானவர்கள் அல்ல என்பதை தி.மு.க. வெளிப்படுத்தி இருப்பதாகக் கூறப்படுகிறது.

# பேச்சுக்கான அடிப்படையை உருவாக்க ஜனாதிபதியால் குழு நியமிக்கப்படுமாம்!

கொழும்பு—

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்கும் முன்னர் அதற்கான அடிப்படையை உருவாக்குவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழுவொன்றை நியமிக்கவுள்ளார்.

இந்தக் குழுவில் அரசியல் கட்சிகள் உட்பட சமாதான செயற்பாடுகளின் பங்கு கொள்ள வேண்டியஏனைய தரப்பினர், சட்டத்தரணிகள், அரசியல் யாப்பு நிபுணர்கள் உட்பட்டோர் உள்ளடங்குவர்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான தென்பகுதியின் நிலைப்பாடு தொடர்பாக தற்சமயம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியல் கட்சிகளுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இதன்போது பேச்சுவார்த்தைகள் தொடர்பாக மாத்திரமல்லாமல் இறுதித் தீர்வு குறித்தும் ஆராயப்படுவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கத்தோலிக்க சபையின் கர்தினால் அதிவணக்கத்துக்குரிய மெக் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த போதே இந்த விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அலரி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது - வட அயர்லாந்து தீர்வின் அடிப்படை இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பயனுள்ளதாக இருக்கும் என வணக்கத்துக்குரிய கர்தினால் சுட்டிக்காட்டி னார்.

இதனைத் தாம் ஆராய்ந்து பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி மகிந்த 13 ஆவது அரசியல் திருத்த சட்டத்தின் கீழ் அதிகளவிலான அதிகாரப் பரவலாக்கத்துக்கு தயாராகவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஐக்கிய ராஜ்ஜியத்திலும், ஐரோப்பாவிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பில் ஈடுபடுவதாக, ஜனாதிபதி மகிந்த வணக்கத்துக்குரிய கர்தினாலிடம் சுட்டிக்காட்டினார். (01)

# படையதிகாரி கொலை வழக்கு; சந்தேகநபர்கள் மூவர் கைது!

கொழும்பு—

நுவரெலியா இராணுவ முகாமைச் சேர்ந்த புலனாய்வுப் பிரிவு அதிகாரியான சார்ஜன்ட் தனபால கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த 5 சந்தேகநபர்களில் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த 22 ஆம் திகதி நுவரெலியா கோல்ப் மைதானத்தருகே வைத்து சார்ஜன்ட் தனபால சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதையடுத்து பொலிஸார் நடத்திய மிகப் பெரிய தேடுதல் நடவடிக்கையின் போதே - தேடப்பட்டுவந்த சந்தேகநபர்களில் மூவர் கைதுசெய்யப்பட்டார்.

இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள னர். இந்தக் கொலைக்கும் வாகனக் கடத்தலில் ஈடுபடும் குழுவினருக்கும் தொடர்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

# போதிய சாட்சியங்கள் இல்லையேல் சந்தேக நபர்களை விடுதலை செய்க!

கொழும்பு—

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள இரு சந்தேக நபர்கள் தொடர்பாகப் போதிய சாட்சிகள் இல்லையெனில் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் கே.திருக்குமார், சிவரஞ்சன் ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களாவர். இவர்கள் மீது குற்றம் சுமத்துவதற்குரிய சாட்சியங்கள் இல்லாதபடியால் விடுதலை செய்வதற்கான காரணத்தை நாளை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு நீதிவான் சரோஜினி குசல வீரவர்த்தன உத்தரவிட்டார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சந்தேக நபர்களைப் பிணையில் விடுதலை செய்யுமாறு பொலிஸார் குறிப்பிட்டனர். இதற்கு நீதிவான் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு நீதிவான் நீதிமன்றம் ஒன்று எவ்வாறு பிணை வழங்க முடியும் என கேள்வி எழுப்பினார். சந்தேக நபர்களை விடுவிக்க முடியுமாயின் அது தொடர்பான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதோடு, சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

## ஓரே சூலில் நான்கு குழந்தைகள்

கொழும்பு—

கொழும்பு காசல் பெண்கள் வைத்தியசாலையில் பெண் ஒருவர் ஓரே சூலில் நான்கு குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.

நான்கு குழந்தைகளும் ஆரோக்கியமாக உள்ளதென வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

செவ்வந்தி கெட்டி ஆராய்ச்சி என்ற இந்தக் குழந்தைகளின் தாய் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இந்தியா பட்ட காயங்களை குணப்படுத்த வேண்டுமாம்!

## ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு—

சமாதான முயற்சிகளில் இந்தியா பெரும் பங்காற்றவேண்டுமென இலங்கை விரும்பினால் எமது நாட் டில் இந்தியா பட்ட காயங்களை குணப்படுத்துவதுடன், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென ஜாதிக ஹெல உறுமயவின் உதய கம்மன் பில தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நடத்தப்படவுள்ள நினைவுப் பேருரை மற்றும் இந்திய அமைதிப் படையினர் நினைவாக அமைக்கப்படவுள்ள நினைவு மண்டபம் ஆகியவற்றுக்கு எமது வரவேற்பைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

புலிகளுடனான போரில் தமது உயிர்களை இழந்த இந்தியப் படையினரை நாம்பாராட்டிக் கௌரவிக்க வேண்டும்.

சிறந்த கல்விமான்களான பிரதமர் மன்மோகன்சிங், ஜனாதிபதி அப்துல் கலாம் ஆகியோரைப் பெற்றது இந்தியாவுக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயம் ஒரு பெரிய வெற்றியாகும்.

இந்தியத் தலைவர்கள் மற்றும் இராஜதந்திரிகளை நான் சந்தித்த போது - மகிந்த ராஜபக்ஷ ஆசியப் பிராந்தியத்திற்கும், இந்தியாவிற்கும் சார்புடைய தலைவரெனவும் முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கவுக்குப் பின்னர் ஆசிய மற்றும் இந்தியச்சார்புடைய இலங்கைத் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உள்ளார் எனவும் தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவு டன் ஜாதிக ஹெலஉறுமய இணைந்து கொண்டது வெறும் கூட்டணிக்காக அல்ல. மாறாக மகிந்தவின் சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்வதற்கேயாகும்.

எனவே, ஜனாதிபதியின் கரத்தைப் பலப்படுத்துவது நாட்டு மக்கள் அனைவரதும் கடமையெனவும் அவர் தெரிவித்தார்.

# அமைச்சரும், மனைவியும் பிரத்தியேக ஹோட்டலில்; ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதிருப்தி தெரிவிப்பு!

கொழும்பு—

அண்மையில் இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ் தலைமையிலான குழுவில் இடம் பெற்றிருந்த அமைச்சர் ரோகித போகொல்லாகமவின் நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி ராஜபக்ச கடும் சினமடைந்திருப்பதுடன், அவர் மீது விசாரணைகளையும் மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

ஜனாதிபதி ராஜபக்ஷ் தலைமையிலான குழுவில் இடம் பெற்றிருந்த அமைச்சர் போகொல்லாகம மற்றும் அவரது மனைவி இருவரும், இந்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட ஹோட்டலில் தங்காமல், பிரத்தியேகமாக, பல அறைகள் கொண்ட வேறொரு ஹோட்டலில் தங்கியிருந்தனர். இதனால், இலங்கை அரசாங்கம், இந்த ஹோட்டலுக்கு பெருமளவு பணத்தை செலவிட வேண்டியேற்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதியுடன் சென்ற மற்றைய அமைச்சர்கள், இந்திய அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹோட்டல் அறைகளில் தங்க, அமைச்சர் போகொல்லாகம தனியார் ஹோட்டலில் தங்கியிருந்தமை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து அமைச்சர் போகொல்லாகம தங்கியிருந்த ஹோட்டலுக்கு எவ்வளவு தொகை செலுத்தப்பட்டதென ஜனாதிபதியின் செயலாளர் முதலீட்டு சபைத் தலைவரிடம் விளக்கம் கோரவுள்ளார்.

## மட்டக்களப்பில் விபத்து; ஐவர் படுகாயம்!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில் நாவலடி என்னுமிடத்தில் நேற்று முன்தினம் மாலை படையினரின் பஸ் வண்டியொன்றும் லொறி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்தனர்.

லொறி நடத்துனரான கிருஷ்ணகுமார் (வயது 20) மற்றும் படைச்சிப்பாய்களான நவாஸ் (வயது 19), சுனித் (வயது 27) செனவிரத்ன (வயது37), மகிந்த (வயது18) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

# தமிழர்களைப் பிடிக்குமாறு தான் கூறவில்லையாம்!



## மறுக்கிறார் மகிந்த

கொழும்பு—

கொழும்பு நகரைச் சுற்றி வளைத்து குற்றவாளிகளையும், போதைப் பொருள் வியாபாரிகளையுமே கைது செய்யுமாறு கூறினேனே தவிர - தமிழ் மக்களைக் கைதுசெய்யுமாறு கூற வில்லை என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புத் தேடுதல் குறித்து மலையக மக்கள் முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் பெ.இராதாகிருஷ்ணன் மகிந்தவு டன் தொடர்புகொண்டு பேசியபோதே மேற்கண்டவாறு மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இராதாகிருஷ்ணனிடம் மகிந்த ராஜபக்ஷ மேலும் கூறுகையில் - குற்றவாளிகள், போதைப் பொருள் விற்பனையாளர்கள் மற்றும் கைதுசெய்ய உத்தரவிடப்பட்டவர்களையே தேடுதல் நடத்தி கைது செய்யுமாறு உத்தரவிட்டேன். கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் இதனடிப்படையிலேயே பிடிக்கப்பட்டவர்கள்.

தமிழர்கள் எனது நண்பர்கள். அவர்கள் துன்பப்படுவதையும், அவர்களுக்கு தீங்கேற்படுவதையும் நான் விரும்பவில்லை. இது தொடர்பாக அதிக கவனம் கொண்டு செயற்படுகின்றேன் எனத் தெரிவித்தார்.

# நியூஸிலாந்துடனான 2ஆவது போட்டியில் 5 விக்கெட்டுக்களால் இலங்கை தோல்வி



கிறிஸ்ட்சேர்ச்


இலங்கை அணிக்கு எதிராக கிறிஸ்ட்சேர்ச்சில் நேற்று நடைபெற்ற 2ஆவது ஒருநாள் போட்டியிலும் நியூஸிலாந்து அணி 5 விக்கெட்டுக்களால் இலங்கையைத் தோற்கடித்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணித் தலைவர் விற்றோரி இலங்கையை துடுப்பெடுத்தாட அழைத்தார். இதன்படி தரங்க மற்றும் குணவர்த்தன இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர்.

எனினும், 17 பந்துகளில் 3 ஓட்டங்களை எடுத்திருந்த குணவர்த்தன ஆட்டமிழந்தார். இதனையடுத்து சங்ககார இணைந்தார். சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்த அவர் - 36 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில் ரன் அவுட்டானார்.

அடுத்து ஜெயவர்த்தன களமிறங்கியபோதும், அவரும் சோபிக்கமுடியாத நிலையில் 6 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

ஒருபுறம் விக்கெட்டுக்கள் சரிந்தாலும், மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய தரங்க சதமடித்தார். இவருக்கு உறுதுணையாக பின்னர் இணைந்த அத்தபத்துவும் சிறப்பாக விளையாடினார். எனினும், அணி 169 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 125 பந்துகளில் 14 பவுண்டரிகள் அடங்கலாக 103 ஓட்டங்களைப் பெற்றிருந்த தரங்க ஆட்டமிழந்தார்.



அடுத்துவந்த டில்ஷான் 10, மஃரூப் 7 ஓட்டங்களுடன் வெளியேறினர். இதன்பின் ஆர்னோல்ட் வந்தார். அவர் அதிரடியாக ஆடிய வேளையிலும், மறுமுனையில் நின்ற அத்தபத்து ரன் அவுட்டானார். இவர் 46 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்றார்.

50 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆர்னோல்ட் 21, வாஸ் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மில்ஸ் 2, கெய்ன்ஸ், ஓரம், பொண்ட் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 256 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 48 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து அந்த இலக்கினை அடைந்தது.



அவ்வணி சார்பாக வின்சென்ட் 46, புல்டன் 32, ஸ்ரைரிஸ் 28, அஸ்ரில் ஆட்டமிழக்காது 90 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை பந்துவீச்சாளர்கள் தமது மோசமான பந்துவீச்சால் 26 உதிரிகளை விட்டுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் மஃரூப் 2, வாஸ், டில்ஷான், முரளி மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

# தென்னாபிரிக்கா 451 ஓட்டங்களை முதலாவது இனிங்ஸில் குவித்தது



சிட்னி

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சிட்னியில் இடம்பெற்றுவரும் 3ஆவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி தனது முதல் இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களை இழந்து 451 ஓட்டங்களைக் குவித்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

நேற்றுமுன்தினம் 3 விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னாபிரிக்க அணியில் கலிஸ் 80 ஓட்டங்களுடனும், பிறின்ஸ் 62 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

நேற்றையதினம் இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடி சதமடித்ததன் மூலம், தென்னாபிரிக்க அணி வலுவானதொரு நிலையை அடைந்தது. நேற்றையதினம் அணி 305 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 275 பந்துகளில் 17 பவுண்டரிகள் அடங்கலாக 111 ஓட்டங்களைப்

விளையாட்டு


பெற்றிருந்த கலிஸ் ஆட்டமிழந்தார்.

இதன்பின் ரூடொல்ப் இணைந்தார். எனினும், மறுமுனையில் நின்ற பிறின்ஸ் 271 பந்துகளில் 13 பவுண்டரிகள் அடங்கலாக 119 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன்பின் பௌச்சர் களமிறங்கினார். ஆனாலும், அவரால் பெரிதாக ஸ்கோரை எட்டமுடியவில்லை. அவர் 5 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் பவிலியன் திரும்பினார்.

இதனையடுத்து பொலக் வந்தார். இந்த நிலையில் அணி 394 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 110 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த ரூடொல்ப் ஆட்டமிழந்தார்.

அடுத்து போத்தா களமிறங்கி



னார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடியவேளை, அணி 443 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 64 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொலக் ஆட்டமிழந்தார்.

அடுத்து நெல் வந்தார். ஆனால், அவரும் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க லாங்வெல்ட் இணைந்தார். இந்த நிலையில் அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 451 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் - அணித் தலைவர் சிமித் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார்.

இதில் போத்தா 20, லாங்வெல்ட் 1 ஓட்டத்துடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் லீ 3, வோன் மற்றும் மக்ரா இருவரும் தலா 2, சைமன்ஸ், மக்கில் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து தனது முதல் இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்ரேலிய அணி நெருக்கடியைச் சந்தித்தது. இந்த அணி 22 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 4 ஓட்டங்களுடன் நின்ற ஹைடன் - லாங்வெல்டின் பந்தில் போல்டானார்.

அடுத்து பொண்டிங் இணைந்தார். எனினும், அணி 35 ஓட்டங்களைப்



பெற்றிருக்கையில் 20 பந்துகளில் 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த லாங்கர் - லாங்வெல்டின் பந்தில் போல்டானார்.

அடுத்து ஹொட்ஜ் இணைந்தார். ஆனால், அவரும் 6 ஓட்டங்களுடன் நெல்லின் பந்தில் ரூடொல்ப்பிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

நேற்றைய ஆட்டநேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி அதன் முதல் இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் பொண்டிங் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

பந்துவீச்சில் லாங்வெல்ட் 2, நெல் 1 விக்கெட்டைக் கைப்பற்றியுள்ளனர்.


## இராணுவ வன்முறையைக் கண்டித்து சென்னையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திலிருந்து...

















# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை




▲ இல 01-05 வரை உள்ள வினாக்களில் படங்கள் ஒரு ஒழுங்கற்ற முறையில் அமைந்துள்ளன. இப்படங்களில் இரண்டை இப்பொழுது உள்ள இடத்தில் இருந்து மாற்றியமைத்தால் ஒரு ஒழுங்கு ஏற்படும். எனவே அவ்வாறு மாற்ற வேண்டிய படங்களுக்கான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

1.



1) AD 2) BC 3) DE 4) CD

2.



1) AC 2) BD 3) CE 4) DC

3. கம்பக என்ற சொல் இலக்கங்களைப் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள விடைகளிடையே இச்சொல் எழுதப்பட்டுள்ள முறை யாது?
1) 3,2,3,5 2) 3,2,4,3 3) 3,3,2,5 4) 3,5,4,1


▲ இல 04-05 வரை உள்ள வினாக்களில் கோடிடப்பட்டுள்ள சொற்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

4. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
1) மனம், உதடு 2) உள்ளம், வாய்
3) உள்ளம், வதனம் 4) இதயம், மனம்

5. மாதவன் வறியவன் எனினும் அறிவுமிக்கவன்
1) ஏழை, படிப்பு 2) பணக்காரன், படிப்பு
3) ஏழை, ஆற்றல் 4) ஏழை, புத்தி

▲ கீழே உள்ள சொற்களை உரிய முறைப்படி வகைப்படுத்துக

சிங்கம், கிளி, பூனை, நாய், பசு, யானை, கரடி, காகம், புலி




▲ கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபை அவதானித்து இல 06-10 வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

| | |
|---|---|
| மாம்பழம் | ○○○○○ |
| தோடம்பழம் | ○○○ |
| வாழைப்பழம் | ○○○○○○ |
| கொய்யாப்பழம் | ○○○○○○○○ |

(இந்த வரைபு ஒரு கூடையில் உள்ள பழங்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது.)

6. கூடையில் மாம்பழங்களை விட 5 வாழைப்பழங்கள் கூடுதலாகவுள்ளன. கூடையிலுள்ள வாழைப்பழங்கள் எத்தனை?......................................


7. தோடம்பழங்களை விட எத்தனை கொய்யாப்பழங்கள் கூடுதலாக உள்ளன?........

8. | 2 | 4 | .... | 8 | 10 | 12 |


9. | 5 | 7 | .... | 11 | 13 | 15 |

10. | 1 | .... | 9 | 16 | 23 | 36 |

11. கோலம் I, IIற்கு ஏற்ப கோலம் IIIல் வரவேண்டிய எண்ணை எழுதுக.




▲ இல 11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்குப் புள்ளிக்கோட்டில் விடையினை எழுதுக. தரம் 5 மாணவர்கள் விரும்பும் உணவு பற்றிய விபரங்கள் பின்வரும் சலாகை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து கீழ்உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.




12. கூடிய தொகையான பிள்ளைகள் விரும்பும் உணவு வகை எது?
..................................................................

13. மிகக் குறைந்த பிள்ளைகள் விரும்பும் உணவு வகை எது?
..................................................................

14. சம தொகையான பிள்ளைகள் விரும்பும் உணவு வகை எது?
..................................................................

15. ஆறுவகையான உணவுகளையும் விரும்பும் மொத்தப் பிள்ளைகள் தொகை யாது?
..................................................................


▲ இல 16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்குரிய தமிழ்ச் சொற்களைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

16. BOOK (புத்தகம், மேசை, கதிரை, பேனை)
17. STUDENT (ஆசிரியர், மாணவர், உபஅதிபர், அதிபர்)
18. MARKET (சந்தை, வகுப்பறை, நூலகம், விளையாட்டிடம்)
19. UNCLE (தகப்பன், தாய், மாமா, அண்ணை)
20. RICE (சோறு, பாண், பிட்டு, தோசை)

▲ இல 21 முதல் 30 வரையுள்ள வினாக்கள் சரியாயின் "சரி" யெனவும் பிழையாயின் "பிழை" யெனவும் அடைப்பினுள் எழுதுக.


21. பூவின் பகுதிகளில் ஒன்று குறி ஆகும். (........)
22. தாவரங்களின் பச்சை நிறமான பகுதியில் பகற் காலத்தில் ஒளித்தொகுப்பு நடைபெறாது. (........)
23. வண்ணத்துப்பூச்சி பூக்களை நாடி வருகின்றன. (........)
24. இலங்கை நாட்டின் தேசிய பூ நீலோற்பலம் (........)
25. மா மரவகையைச் சேரும். (........)
26. யானை ஒரு வீட்டு மிருகம் ஆகும். (........)
27. பசு தாவர உணவு உண்ணும் பிராணி ஆகும். (........)
28. நாய் ஓர் அனைத்தும் உண்ணி ஆகும். (........)
29. நன்றியுள்ள பிராணிகளில் சிங்கமும் ஒன்றாகும். (........)
30. சாதாரண தபாலுக்கு ரூபா. 5.00 சத முத்திரை ஒட்ட வேண்டும். (........)

▲ இல 31 முதல் 35 வரையுள்ளவற்றுக்குப் பொருத்தமான பெயரை வெற்றுக்கூட்டில் எழுதுக.



31) .................. 32) .................. 33) .................. 34) .................. 35) ..................

▲ இல 36 முதல் 40 வரையுள்ள படங்களில் முதல் இரண்டு படங்களுக்கான தொடர்பை அவதானித்து மூன்றாவது படத்துடன் தொடர்புடைய படத்தை முன்னால் உள்ள மூன்று படங்களிலிருந்து தெரிந்து அதன் கீழ் கீறிடுக.




# தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை

## பகுதி - II

➡பின்வரும் தகவலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

முட்டை மிதக்கும் இரகசியம்.
நல்ல முட்டை கனமானது. நீரில் மூழ்கும். கெட்டுப்போன முட்டை நீரில் மிதக்கும். காரணம் என்ன தெரியுமா?
முட்டை கெட்டுப்போகும் போது அதில் உள்ள திரவப்பொருள்கள் இரசாயன மாற்றம் பெற்று சில வாயுக்களாக மாறி முட்டை ஓட்டின் வழியே வெளியேறுகின்றது. இதனால் கெட்டுப்போன முட்டையின் கனம் குறைந்து நீரில் மிதக்கிறது.


(01)
1. முட்டை என்பதன் பன்மைச் சொல்லினை எழுதுக.
..........................................................................................
2. இரகசியம் என்பதன் எதிர்ச்சொல் யாது?
..........................................................................................
3. மிதக்கிறது என்பதன் இறந்த கால வடிவம் யாது?
..........................................................................................
4. திரவப் பொருட்கள் என்பதைப் பிரித்து எழுதுக?
..........................................................................................
5. தெரியுமா? என்ற சொல்லுக்கு அருகேயுள்ள குறியீட்டின் பெயரென்ன?
..........................................................................................

(02) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
1. 6537 = 6000+ ☐ +30+7 வெற்றுக்கோட்டில் வரவேண்டிய எண் யாது?
..........................................................................................
2.  5/8 பகுதிக்கு நிறம் தீட்டுக.
3. 30நாட்களைக் கொண்ட மாதங்களின் பெயர்களை எழுதுக?
..........................................................................................
4. 5 கிலோமீற்றர் 50 மீற்றர் என்பதைக் குறியீட்டைப் பயன்படுத்தி எழுதுக.
..........................................................................................
5. நாற்பதாயிரத்து நானூறு என்பதை எண்குறியீட்டைப் பயன்படுத்தி எழுதுக.
..........................................................................................

(03) பின்வரும் சொற்களை சிங்கள மொழியிலும் ஆங்கில மொழியிலும் எழுதுக.

| சொல் | ஆங்கிலமொழி | சிங்களமொழி |
|---|---|---|
| 1. கதிரை | ........................ | ........................ |
| 2. அதிபர் | ........................ | ........................ |
| 3. வணக்கம் | ........................ | ........................ |

(04) பின்வரும் வினாக்களில் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.
1. மரஞ்செடி கொடிகள் சுவாசிக்கின்றன. (.............)
2. ஆட்டுக்குட்டி பால் கொடுப்பதில்லை. (.............)
3. குயில் காகத்தின் கூட்டில் முட்டையிடுவதில்லை. (.............)
4. கட்டடத்தொழில் செய்பவர் மேசன் என்று அழைக்கப்படுவார். (.............)
5. மரக்கறிவகைகளில் கரட்டை பச்சையாக உண்ணுவது நல்லது. (.............)
6. பதங்கெட்ட உணவுகள் உடலுக்கு நோய்களை விளைவிக்கின்றன. (.............)
7. இலங்கையில் ஒன்பது மாகாணங்கள் உண்டு. (.............)
8. இலங்கையின் தேசியப் பறவை காட்டுக்கோழிச் சேவல் ஆகும். (.............)
9. புத்தகோயிலை விகாரை என்று அழைப்பர். (.............)
10. நாம் கேணி, குளங்களில் அவதானமாக இறங்கிக் குளிக்கலாம் (.............)

(05) பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.
1. 

இவ்வெண்சட்டம் காட்டும் எண் யாது?
..........................................................

2. .........., 500, ...... முந்திய எண்ணை யும் பிந்திய எண்ணையும் வெற்றுக்கோட்டில் எழுதுக.

3. 6320
849 +

4. 837
249 -

5. 204
3x

6. 2 | 486

7. 2 கிலோ சீனியின் விலை ரூபா 84 எனின் 500 கிராம் சீனியின் விலை என்ன?
..........................................................................................
8. 2 லீற்றர் பாலை ஒருவருக்கு 100 மி.லீ பால் வீதம் எத்தனை பேருக்கு கொடுக்கலாம்?
..........................................................................................
9. இராமனுக்கு வலப்பக்கத்தில் கௌசிகாவும் இடப்பக்கத்தில் ஜஸ்வரனும் நிற்கிறார்கள். நடுவில் நிற்பவர் யார்?
..........................................................................................
10. 375 cm ஐ m, cm இல் எழுதுக.

(06) பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்-மின் பிரபை
வீசு புகழ் நல்லூரான் வில்லவராயன்- கனக
வாசலிடைக் கொன்றை மரம்.

- சின்னத்தம்பிப் புலவர்.

1. வாசலில் உள்ள மரம் எது?
..........................................................................................
2. அம் மரத்தின் பூ எப்படியானது?
..........................................................................................
3. யாருடைய புகழ் வீசப்படுகிறது?
..........................................................................................
4. தாதிறைக்கும் என்பதைப் பிரித்தெழுதுக?
..........................................................................................
5. இப்பாடலைப் பாடியவர் யார்?
..........................................................................................

(07) பின்வரும் அழைப்பிதழின் ஒரு பகுதி கிழிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. பேச்சு தமிழ்த்தின விழாவின் சிறப்பு | மு.ப 9.50 - 10.00 |
| 2. பரதநாட்டியம் | மு.ப 9.35 - 9.50 |
| 3. தமிழ்த்தாய் வாழ்த்து | மு.ப 9.15 - 9.25 |
| 4. இடைவேளை | மு.ப 10.00 -10.20 |
| 5.வரவேற்புரை | மு.ப 9.25 - 9.35 |
| 6. குத்துவிளக்கேற்றல் | மு.ப 9.00 மணி |

1. அவற்றைச் சரியாகப் பொருத்தினால் வரும் இலக்கங்களை எழுதுக?
..........................................................................................
2. இவ்விழா ஆரம்பித்த நேரம் யாது?
..........................................................................................
3. மூன்றாவதாக இடம்பெற்ற நிகழ்வு எது?
..........................................................................................
4. மு.ப என்னும் சுருக்கக் குறியீட்டை விரித்து எழுதுக?
..........................................................................................
5. பரத நாட்டிய நிகழ்வுக்கு எவ்வளவு நேரம் எடுத்தது?
..........................................................................................
6. இறுதி நிகழ்வைக் குறிக்கும் இலக்கம் யாது?
..........................................................................................

(08) (அ) பகுதிக்குப் பொருத்தமான விடையை (ஆ) பகுதியிலிருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை வெற்றுக் கூட்டுக்குள் இடுக.

| (அ) | | (ஆ) |
|---|---|---|
| 1. வாரியிறைத்தல் | ☐ | 1. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை |
| 2. கண்வளர்தல் | ☐ | 2. ஒத்த இணைமொழி |
| 3. திருப்தியற்ற மனநிலை | ☐ | 3. சீனப் பழமொழி |
| 4. ஒருவனது முகத்துக்கு நேராகச் சொல்வது அவதூறல்ல. | ☐ | 4. நித்திரை செய்தல் |
| 5. கண்ணும் கருத்தும் | ☐ | 5. அளவின்றிச் செலவு செய்தல் |
| 6. கத்தும் கனைக்கும் ஜீளையிடும் | ☐ | 6. ரெலிவிசன் |
| 7. சட்டி பானை வனைபவன் | ☐ | 7. கிவி |
| 8. உரோமம் கொண்ட பறவை | ☐ | 8. பிராணிகளின் தொனிகள் |
| 9. அளவுக்கு அதிகமாகப் பேசித் திரிபவன் | ☐ | 9. புளுகன் |
| 10. காட்சி வானொலி | ☐ | 10. குயவன் |

(09) பின்வரும் வினாக்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.
1. இலங்கையின் தேசிய மரம்.................... ஆகும்.

2.தாவரமொன்றின் பிரதான பகுதிகள் மூன்றினை எழுதுக.
1. ......................... 2. ......................... 3. .........................

3. எம்மைச் சூழவுள்ள பிராணிகள் மூன்றினை எழுதுக.
1.................... 2.................... 3....................

4. நுளம்பின் வளர்ச்சிப்பருவங்கள் நான்கையும் எழுதுக.
1.................... 2.................... 3 .................... 4....................

5. பனை ஒரு .................... வேர்த் தாவரமாகும்.

6. உதை பந்தாட்டம் ஒரு ................ விளையாட்டாகும்.

7.  முன்னால் .................... கடவை உள்ளது.

8. 


இக்கருவியின் பெயர் என்ன.............


9. 

தீதாள் உபகரணம் தையல் தைக்கும் போது................ கையில் குத்தாமல் இருப்பதற்குப் பயன்படுகிறது.

10.  இப்புராதன காலச் சிங்கள சித்திர வடிவத்தின் பெயர்.............. ஆகும்.

11. வானவில்லில் தோன்றும் எவையேனும் மூன்று நிறங்களை எழுதுக.
1.......................... 2.......................... 3..........................

12.  அருகே உள்ள படத்திலுள்ள பாத்திரத்தில் நிரம்ப நீர் உள்ளது. நீர்த் துவாரங்களைத் திறந்ததும் நீர் பாயும் விதத்தை வரைந்து காட்டுக.

13. 

இவ்வமைப்பு எதனைக் குறிக்கும்.
..........................................................

14. இதன் பெயர்களுக்கும் பெயரிடுக.
A..................... B..................... C.....................

15. இலங்கையில் பேசப்படும் மொழிகள் எவை?
..........................................................................................

16. இந்துக்களின் விசேட தினங்கள் இரண்டு எழுதுக?
..........................................................................................

நான் பாடசாலைக்கு எனது நண்பியுடன் சென்றுகொண்டிருந்தேன். நாங்கள் வீதிவளவைக் கடந்து சில மீற்றர் தூரம் சென்றோம். டமார் என்ற பெரிய சத்தம் கேட்டது. கதையை ஆறு வாக்கியங்களில் எழுதுக.

விடைகள் - அடுத்தவாரம்.

ஆசிரியர் - த.அம்பிகைபாகன்

# மண்டைதீவுக்கு வெளியிடங்களைச் சேர்ந்தோர் செல்வதற்கு கடற்படையினர் அனுமதி மறுப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் - மண்டைதீவுக்கு வெளியிடங்களைச் சேர்ந்தோர் செல்வதற்குக் கடற்படையினர் முற்றாகத் தடைவிதித்துள்ளனர்.

மண்டைதீவு முழுமையும், கடற்படையின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக உள்ளபோதும், அங்கு பல்வேறு நியந்தனைகளின் அடிப்படையில் சில குடும்பங்கள் மீளக்குடியேறி வாழ்வதற்கு கடற்படை அனுமதி வழங்கியுள்ளது.

மண்டைதீவில் குடியமர்ந்துள்ள மக்களுக்கும், வெளியிட மக்களுக்கும் இடையிலான தொடர்புகளைத் துண்டிக்கும் வகையில் -

மண்டைதீவுக்குள், அந்த இடங்களைச் சேர்ந்தவர்களைத் தவிர பிற இடங்களைச் சேர்ந்தவர்கள் செல்வதற்குக் கடற்படையினர் தடைவிதித்துள்ளனர்.

இதனால் வெளியிடத் தொடர்புகள் இன்றி மண்டைதீவு மக்கள் கடற்படையினரால் தனிமைப்படுத்தப்படும் அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

# வளர்மதி நிறைவாழ்வு நிலைய புதுவருட ஒன்றுகூடல் நிகழ்வு!

சுதுமலை —

கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வு நிலையத்தில் புதுவருட ஒன்றுகூடல் நிகழ்வு - கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நிலையத் தலைவர் செல்லத்துரை தலைமையில் நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிராமத்தின் தேவைகள், எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் - கடந்த காலச் செயற்பாடுகளின் மீளாய்வும் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புதுவருட தினத்தில் ஒன்றுகூடிய கிராம மக்கள் தமது கிராமம் தொடர்பான கருத்துப் பகிர்வின் மூலமாக, கிராமம் பற்றியதான அவதானிப்புக்களையும், செயற்பாடுகளையும் அறிந்துகொள்ள முடிந்ததாகக் கருத்தரங்கில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.

இதேவேளை, எதிர்வரும் சனிக்கிழமை வளர்மதி நிறைவாழ்வு நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகள் கிராம மக்களால் சிரமதானம் மூலமாக துப்புரவாக்கப்படவுள்ளதாக நிலையச் செயலாளர் சத்தியமூர்த்தி தெரிவித்தார். (91)

# தொடரும் மனிதப் படுகொலைகளுக்கு பல்கலை ஆசிரியர் சங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம் —

அண்மைக்காலமாக வடக்கு-கிழக்கில், குறிப்பாக யாழ். மாவட்டத்தில் இடம்பெறும் தாக்குதல்களையும், சுற்றி வளைப்புகள் என்ற போர்வையில் இடம்பெறும் மனித வதைகளையும், உளத் தாக்கங்களையும், மனிதப் படுகொலைகளையும் -

மேலும் கடந்த 2 ஆம் திகதி திருகோணமலையில் இடம்பெற்ற தாக்குதலையும் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இது குறித்து யாழ்பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில்: -

இந்தச் செயலுடன் தொடர்பானவர்களை நீதியின் முன் நிறுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதுடன், இனிமேலும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதவாறு அரசாங்கம் உரிய நடவடிக்கையை உடன் எடுக்குமாறு கேட்டுள்ளது.

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் நேற்றுமுதல் பகிஷ்கரிப்பில் குதிப்பு!

யாழ்ப்பாணம் —

கடந்த 27 ஆம் திகதி பருத்தித்துறை நகர்ப்பகுதியில் வைத்து பலாலி ஆசிரியர் கலாசாலையின் நீரியல் உயிர்வளத்துறையின் ஆசிரிய மாணவன் பாக்கியநாதன் - கமலக்கண்ணன் கைதுசெய்யப்பட்டதையடுத்து நேற்று இரண்டாம் நாளாகவும் பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள் தமது விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

இந்தப்பகிஷ்கரிப்புப் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆசிரிய மாணவர்களும் தமது விரிவுரைகளை நேற்றுமுன்தினம்முதல் பகிஷ்கரித்துவருகின்றனர்.

கைதுசெய்யப்பட்ட மாணவரின் விடுதலையைத் துரிதப்படுத்தாத பட்சத்தில் இந்தப் போராட்டத்தை ஏனைய ஆசிரிய கலாசாலைக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் - பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர் மன்றம் தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட மாணவன் கைது தொடர்பாக பலாலி ஆசிரிய கலாசாலையின் அதிபர் கு. சதாசிவமூர்த்தி, விரிவுரையாளர் குயின்ரஸ் ஆகியோர் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடியபோது உயர் நீதிமன்றில் அனுமதி கிடைத்ததும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் ஆசிரிய கலாசாலையின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் தடைப்பட்டுள்ளதுடன் - மாணவனின் விடுதலையைத் துரிதப்படுத்தி ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தித்தருமாறு சம்பந்தப்பட்ட அனைவரிடமும் பலாலி ஆசிரிய கலாசாலையின் மாணவர் மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (12)

## திருமலையில் தமிழ் மாணவர் படுகொலை;

# தமிழர் தாயகத்தில் குழப்ப நிலையை ஏற்படுத்தி போருக்கு இழுக்கின்ற ஒரு நடவடிக்கையே...!

## வணிகபீட மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம் —

நேற்றுமுன்தினம் திருகோணமலையில் தமிழ் மாணவர்கள் ஐவர் அரச கூலிப்படையாலும், அதன் கைக்கூலிகளாலும் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்மக்கள் மீதும், தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஏனைய மாணவர்கள் மீதும் நடத்தப்படுகின்ற தொடர்ச்சியான வன்முறையின் தொடர்ச்சியே இதுவாகும்.

இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என, திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக - யாழ்.பல்கலைக் கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தமிழர் தாயகத்தில் குழப்ப நிலையைத் தோற்றுவித்துப் போருக்கு ஈர்க்கின்ற ஒரு நடவடிக்கையே இதுவாகும். அது மட்டுமன்றிக் கடந்த மாதத்தில் ஏற்பட்டது போன்ற ஒரு அசாதாரண சூழ்நிலையைத் தோற்றுவித்து - தமிழ் மக்களைக் கொன்று வருவதுடன் அவர்களின் கொலைகளை நியாயப்படுத்த அப்பட்டமான பொய்களைக் கூறிவருவதும் நீங்கள் அறிந்ததே.

இனி வருங்காலங்களில் இது போன்ற சம்பவங்கள் தொடருமானால் மாணவர்கள் தமது பாதுகாப்பைத் தாமே உறுதிப்படுத்தவேண்டிவரும் என்பதை அரசுக்கும், அதன் கூலிப் படைகளுக்கும் தெளிவாகக் கூற விரும்புகின்றோம்.

அத்துடன் கூலிப்படைகளால் உயிர்மாய்க்கப்பட்ட எமது அன்புச் சகோதரங்களுக்கும் கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன், அவர்களின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எழுத்தாளர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம் —

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல எழுத்தாளர்களையும், தமிழ் செய்தி தக்வல் இமயம் ஒருங்கிணைந்து அவர்களது அனுபவம், ஆற்றல், ஆக்கங்கள் தொடர்பாக கலந்துரையாடவும், ஆலோசனை பகிரவும் விரும்புகின்றது.

செய்தித் தகவல் மையம் மேற்கொள்ள இருக்கும் இந்த தமிழ் பணிக்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் எழுத்தாளர்கள் - 180, பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள அவர்களின் அலுவலகத்துக்கு இன்று காலை 10 மணி தொடக்கம் - மாலை 3 மணிவரை தொடர்புகொள்ளுமாறு, தமிழ் தகவல் செய்தி மைய இணைப்பாளர் ஜெ.பாரதி கேட்டுள்ளார்.

## வல்வைப் பாலத்திலும் சோதனை

நெல்லியடி —

நேற்று நண்பகல் 1 மணியளவில் வல்வைச் சந்தியிலிருந்து இராணுவ வாகனத்தில் பெருமளவு இராணுவத்தினர் வந்திறங்கி அந்தப் பகுதியிலிருந்து ரோந்து நடவடிக்கையில் நெல்லியடி இராணுவ முகாம்வரை ஈடுபட்டதுடன் - இந்தப் பகுதியூடான போக்குவரத்தில் ஈடுபட்ட மினிபஸ், பஸ், மோட்டார் சைக்கிள், ஆட்டோ, சைக்கிள் ஆகியவற்றில் சென்றவர்களைத் தடுத்துவைத்து விசாரித்தனர். (12)



சுனாமி அனர்த்த முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்ட பிரசவ சிகிச்சைக்கூடத்தை போர்த்துக்கல் சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி அனாமரியா மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் கேதீஸ்வரன் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைப்பதையும், அருகில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மகப்பேற்று வைத்திய நிபுணர் ஆர். குழந்தைவடிவேல் நிற்பதையும் படத்தில் காணலாம்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்பது



பெயர் : கோ.கோகிலா
முகவரி : நவிண்டில்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :

முகவரி :

பிறந்த ஆண்டு :



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# வயோதிபரின் பையுள் கைக்குண்டை வைத்த சிப்பாய்; கொழும்புத்துறை பகுதியில் படையினர் கெடுபிடி!

சுதுமலை —

வீதிச் சோதனையில் ஈடுபட்ட படையினர் வயோதிபரின் கைப்பைக்குள் கைக்குண்டை வைத்த விபரீத சம்பவம் - கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்புத்துறையைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் சுவாமியார் வீதியால் தனது வீடு திரும்புகையில், அவரை மறித்துச் சோதனையிட்ட படையினர் - உங்களுக்கு புதுவருடப் பலகாரம் எனக்கூறி கைக்குண்டை அவரது கைப்பைக்குள் வைத்துள்ளனர்.

கண்பார்வை குறைவான வயோதிபர் படைச் சிப்பாயின் மீது சந்தேகம்கொண்டு சற்றுத் தொலைவில் நின்ற படையினரிடம் படைச் சிப்பாய் தந்ததாகக் கையளித்துள்ளமையால் ஏற்படவிருந்த பெரும் விபரீதம் தடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

வீதியால் பயணிப்போரை வயது வேறுபாடின்றி அச்சுறுத்திவரும் படையினர், இவ்வாறான செயல்களிலும் ஈடுபட்டுவருகின்றனர். இராணுவத்தினர் சோதனையிடும்போது அவதானமாக இருக்கவேண்டும் எனவும், தாங்களே குண்டுகளை வைத்து பொதுமக்களைத் தாக்குவதற்கே இவ்வாறு நடந்துகொள்வதாகவும் - சம்பவத்தை நேரில் அவதானித்த ஒருவர் குறிப்பிடுகிறார்.

இதேவேளை, கொழும்புத்துறைப் பகுதியில் இளைஞர், யுவதிகளை மறித்து யாழ். மாவட்டத்தில் படையினரால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டையைக் கேட்பதுடன், தேசிய அடையாள அட்டையை ஏற்க மறுக்கின்றனர்.

மேற்படி இடங்களில் யுவதிகளையும் உடற்சோதனை செய்துவரும் படையினர் அவர்களை அச்சுறுத்தியும் வருகின்றனர். இதனால் தமது அன்றாடத் தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாத நிலையிலுள்ளதாகப் பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர். (91)

## நேர்முகத் தேர்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம் —

ஜீ.ரி.சற் நிறுவனத்தின் செயலாற்றுகை திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (ஜீ.ரி.சற்.PIP) நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களை வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு பணியாளர்களாக தெரிவு செய்வதற்காக பிரதம செயலாளர் செயலகத்தில் இந்த மாதம் 4, 5, 6 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாகப் பிற்போடப்பட்ட நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 25, 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சையில் தோற்றவிருக்கும் நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களுக்கு இது தொடர்பாக கடிதமூலம் அறிவிக்கப்படும் என வடக்கு - கிழக்கு மாகாணசபை பொது நிர்வாக அமைச்சின் உதவிச் செயலாளர் பி.வாகீசன் தெரிவித்தார்.

## ஓட்டோ விபத்தில் சாரதி காயம்

சங்கானை —

ஓட்டோ - லான்ட் மாஸ்டர் மோதலில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த சம்பவம் ஒன்று சங்கரத்தையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சங்கானையிலிருந்து சங்கரத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஓட்டோவுடன், எதிர்ப்புறமாக நோக்கிவந்த லான்ட் மாஸ்ரர் மோதியதில் ஓட்டோ சாரதி காயமுற்றதுடன், ஓட்டோவும் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தியேட்டரடி சங்கானைச் சேர்ந்த த. செல்லையா காந்தன் (வயது 40) என்பவர்காயமுற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (48)

# எலும்புக்கூடுகளை பகுப்பாய்வுக்குட்படுத்த மன்னார் மாவட்ட நீதிபதி உத்தரவு!

மன்னார்—

மன்னாரில் கடற்படையினரால் எரிக்கப்பட்டோரின் எலும்புக்கூடுகளைப் பகுப்பாய்வுக்குட்படுத்த மன்னார் நீதிபதி எம்.எம் அப்துல்லா உத்தரவிட்டுள்ளார்.

மன்னார் 100 வீடமைப்புத் திட்டப்பகுதியில் கடந்த மாதம் 25 ஆம் திகதி கடற்படையினரால் எரிக்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டமை தெரிந்தவிடயமே.

கடந்த மாதம் 23 ஆம் திகதி கடற்படையினரின் வாகனம் பேசாலையில் கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளான 2 நாட்களுக்குப் பின்னரே இந்த எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவை எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் இமானுவேல் குரூஸ் (வயது 43) அவரது மனைவி அந்தோனிக்கம் குரூஸ் (வயது 43) தெரசா குரூஸ் (வயது 41) மற்றும் அவருடைய மகன் திலுக்சன்(வயது 4) ஆகியோரது எலும்புக்கூடுகளாக இருக்கக்கூடும் என மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சந்தேகம் தெரிவித்தனர்.

இந்த நிலையில் எரிக்கப்பட்ட எலும்புக்கூடுகளை அடையாளம் காண்பதற்காக காலியில் உள்ள கரப்பிட்டிய மருத்துவமனை பகுப்பாய்வுக் கூடத்துக்கு அனுப்ப அனுமதி கோரி - மன்னார் நீதிமன்றில் பொலிஸார் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி எலும்புக் கூடுகளை பகுப்பாய்வுக் கூடத்துக்கு அனுப்பி வைக்க உத்தரவிட்டார்.

பேசாலைத் தாக்குதலையடுத்து, கடற்படையினர் நடத்திய காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் பல குடும்பத்தினர் மன்னார் வெற்றிமாதா ஆலயத்தில் அடைக்கலம் புகுந்தனர். அதன் பின்னர் தங்களது வீடுகளுக்கு அவர்கள் திரும்பிச் சென்ற போதே எரிக்கப்பட்ட இந்த எலும்புக்கூடுகளைக் கண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வைத்திய வசதியின்றி தவிக்கும் பூநகரி-ஜெயபுரம் பிரதேச மக்கள்!

பூநகரி—

பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜெயபுரம் பிரதேசமக்கள் - மருத்துவ வசதியின்றிப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேச மக்கள் மருத்துவ வசதியியைப் பெறுவதற்கு 8 கிலோ மீற்றர் தூரம் பயணித்து முழங்காவில் வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் சோலை, பல்லவராயன்கட்டு, ஜெயபுரம் கிராமம் வரையான பகுதிகளில் வாழும் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இந்த பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு பல தடவைகள் அறிவித்தும் வைத்திய வசதியை இதுவரை ஆரம்பிக்கப்படவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (பூ)

# அரங்க பயிற்சி பட்டறை

இராமநாதபுரம்—

இராமநாதபுரம் ஆரோக்கியநாதர் ஆலயத்தில் கத்தோலிக்க இளைஞருக்கான வதிவிட அரங்கப் பயிற்சிப் பட்டறை அண்மையில் நடைபெற்றது.

அரங்காலயா பண்பாட்டுக் குழுவைச் சேர்ந்த அ.கிறிஸ்ரிரூபன் தலைமையில் இந்தப் பயிற்சிப் பட்டறை மூன்று நாட்கள் நடைபெற்றது.

இதில் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகரைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட கத்தோலிக்க இளைஞர்கள் பங்குபற்றி பயன் அடைந்தனர். (இ)

# கடற்தொழிலாளர் சங்கங்களுக்கு நொவீப் திட்டத்தின் கீழ் நிதியுதவி

பூநகரி—

பூநகரிப்பிரதேசத்தில் சேவாலங்கா நிறுவனத்தால்- நொவீப் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கடற்தொழிலாளர் சங்கங்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 11 மணியளவில், பூநகரி பிரதேச மண்டபத்தில் பூநகரி பிரதேச செயலகர் மா.சிறீஸ்கந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட ஆறு கிராமங்களில் உள்ள வலுவான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்ட சங்கங்களுக்கு தலா 6லட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது.

இந்தத் திட்டத்துக்கமைய பள்ளிக்குடா கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம், இரணைமாதா நகர் கடற்தொழில் கூட்டுறவு சங்கம், நாச்சிக்குடா கடற்தொழில் கூட்டுறவு சங்கம், கிராஞ்சி கடற்தொழில் கூட்டுறவு சங்கம், கோவில் கலைமகள் கிராம அபிவிருத்திச்சங்கம், வாடியடி மாதர்சங்கம், ஆகிய சங்கங்களே தெரிவு செய்யப்பட்டன.

இவற்றுக்கான காசோலைகளை கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர், நொவீப் திட்ட முகாமையாளர் ஆகியோர் வழங்கிவைத்தனர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் நாகேஸ், நொவீப் திட்டமுகாமையாளர் சபேசன், சேவாலங்கா நிறுவன நிர்வாக உத்தியோகஸ்தர், திட்ட வெளிக்கள உத்தியோகஸ்தர்கள், சமூக வலுவூட்டாளர் மற்றும் மையக் கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (பூ)

# வவுனியா நகரப்பகுதியில் புதிய காவலரண் அமைப்பு

வவுனியா—

வவுனியா நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் புதிய காவலரண்களை அமைக்கும் நடவடிக்கையில் வவுனியா பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

வவுனியா - பூங்கா வீதிச் சந்தியில் இந்தக் காவலரண்கள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. பூங்கா வீதியிலுள்ள நெற்களஞ்சியக் கட்டடத்திலேயே விசேட அதிரடிப்படையினர் முகாமிட்டுள்ளனர். இதன் அருகிலேயே வவுனியா வளாகத்தின் நிர்வாகக் கட்டடமும் அமைந்துள்ளது.

இந்த புதிய காவலரண் அமைக்கப்படும் குறிப்பிட்ட சந்திக்கும், அதிரடி முகாமுக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் 150 மீற்றர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரண்டுக்கும் நடுவிலேயே வளாகக் கட்டடம் அமைந்துள்ளமை குறிப்பிடத் தக் கது.



வவுனியா - தேசிய கல்வியியற் கல்லூரியின் 2005 ஆம் ஆண்டு பயிற்சி நெறியை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட முக்கிய பிரமுகர்களையும், பயிற்சியை நிறைவு செய்த பயிலுநர் ஒருவருக்கு பீடாதிபதி சான்றிதழ் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம்.

படம் - கனகரவி

# 200 குடும்பங்கள் வன்னிக்கு சென்றன

கிளிநொச்சி—

யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து பல குடும்பங்கள் விடுதலைப்புலிகளின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களுக்குத் தமது பொருட்களுடன் இடம்பெயர்ந்து சென்றுகொண்டிருக்கின்றனர்.

இதுவரை 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது உடைமைகளுடனும், கால்நடைகள் மற்றும் பொருட்களுடனும் சென்றுள்ளனர் எனத் தெரியவருகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களுக்குள் வரும் மக்களுக்கான வாகன வசதிகள் மற்றும் இருப்பிட வசதிகளை தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்ப்பாண மாவட்ட அரசியற்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ந்து தமது பாதுகாப்புக் காரணங்களுக்காகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் வரும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதால், அதற்கான விரிவான ஏற்பாடுகளை அரசியற்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய வடிவிலான வீடுகள்!

மட்டக்களப்பு—

கோறளைப்பற்று வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட - காயன்கேணி பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பனல் முறையில் நிரந்தர வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. ஒஸ்த்திரியா நாட்டின் நிதியுதவியுடன் - அமெரிக்கா தொழில் நுட்பத்துடன் மைக்றோ கார்ஸ் நிறுவனம் இந்த வீடுகளை அமைத்து வருகிறது.

கல்லுக்குப் பதிலாக கம்பிகள் பொருத்தப்பட்ட றெஜிபோம்களைப் பயன்படுத்தி பொருத்தல் வேலைகள் இடம்பெறுகின்றன. இதன் முதற்கட்டமாக காயான்கேணி பகுதியில் 240 வீடுகள் அமைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீடுகள் இயற்கையின் அனர்த்தங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டு வருவதாகவும் 6,50,000 ரூபா பெறுமதியான சகல வசதிகளையும் கொண்டமைந்துள்ளதாகவும் அதன் பணிப்பாளர் தெரிவித்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் காயன்கேணிப் பிரதேசத்தில் முதல் முறையாக இந்த புதிய வடிவிலான வீடுகள் அமைக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

# விலங்கறுமனைகளில் சுகாதாரத்தைப் பேணுமாறு தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினர் அறிவுறுத்தல்!

கிளிநொச்சி—

விலங்கறுமனைகளில் (கொல்களங்கள்) சுகாதாரத்தைப் பேணுமாறு தமிழீழ சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக தமிழீழ சுகா தாரப்பிரிவினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - மனித உணவுத் தேவைக்கு வழங்கப்படும் இறைச்சி வகைகள் (ஆடு, மாடு) தொற்று ஏற்படாத நிலையில் வழங்குவதற்கு விலக்கறுமனைகள், இறைச்சி வெட்டுமிடங்களில் சுகாதாரத்தைப் பேணுவது அவசியமானதாகும்.

எனவே, அனைத்து விலங்கறுமனைகளும் கீழ்வரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

விலங்கறுமனைகள் அடிப்படை சுகாதார வசதிகளைக் கொண்ட கட்டட, தள அமைப்புடன் காணப்படவேண்டும்.

விலங்கறுமனை தேவைக்கேற்ற வகையில் போதியளவு பாதுகாப்பான நீர்வசதி காணப்படவேண்டும்.

விலங்கறுமனைப் பணியாளர்களின் தேவைக்கேற்ப நீரமைப்பு, மலசலகூடம் காணப்பட வேண்டும்.

விலங்கறுமனையில் விலங்குகள் (மாடு, ஆடு)ஓய்வில் கட்டுவதற்குத் தனியான அமைப்புடைய தொழுவம் காணப்பட வேண்டும்.

வெட்டப்படும் விலங்குகளின் வகைக்கேற்ற வகையில் தனித்தனிப் பகுதியாகப் பிரிக்கப்பட்டு வெட்டுவதன் ஊடாக, விலங்குகளுக்கூடான தொற்றைத் தவிர்க்க முடியும். அத்துடன் தனித்தனியாக விலங்குகள் வெட்டப்பட வேண்டும்.

விலங்கறுமனையில் விலங்குகள் வெட்டுவதற்கு முன்னர், விலங்குகளுக்கான உடற்பரிசோதனையும், வெட்டிய பின்னர் பிணப்பரிசோதனையும் (இறைச்சிப் பரிசோதனை) மேற்கொள்ள வேண்டும்.

விலங்கறுமனைக் கழிவுகளான - தோல், எலும்பு, குடல், சாணம் ஆகியவற்றைப் போடுவதற்கு ஆழமான மூடிய குழி காணப்பட வேண்டும். இக்குழி வாரம் ஒரு முறையேனும் ஒரு அடிக்கு மண் போடப்பட்டு, கழிவுகள் மூடப்பட வேண்டும்.

விலங்கறுமனையில் சேரும் இரத்தம் கலந்த கழிவு நீர், ஏனைய கழிவு நீரகற்ற நிரந்தர அமைப்புடைய மூடிய நீர் உறிஞ்சு குழிகள் காணப்பட வேண்டும்.

நிலையத்தில் இலையான், நுளம்புப் பெருக்கங்கள் இன்றிப் பேணப்பட வேண்டும்.

தொற்று நோயற்ற ஆரோக்கியமானவிலங்குகள் (ஆடு, மாடு) மாத்திரம் இறைச்சிக்கு வெட்டுதல் வேண்டும்.

இறைச்சி வெட்டுபவர்கள் தன் சுகாதாரம், சுகாதாரப் பழக்க வழக்கம் பேணுபவராக இருத்தல் வேண்டும்.

இறைச்சி வகைகள் நிலையங்களிற்கு கொண்டு செல்வதற்கு அலுமினியத்திலான பெட்டிகள் காணப்பட வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.
திருக்குறள்.

## நமது நோக்கு

# தகர்ந்துவரும் அரசின் வியூகங்கள்

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சமாதான நகர்வுகளுக்குள் இந்தியாவை இழுத்துவைத்து தமக்குச் சார்பான அனுகூலங்களைப் பெறமுயன்ற ஜனாதிபதியின் டெலகக்கான விஜயமானது, அவர் எதிர்பார்த்த நன்மைகள் எதனையும் பெற்றுத்தராத சூழலில், நோர்வே அரசு எடுத்துள்ள ஒரு முடிவு மற்றொரு ஏமாற்றத்தையும் அளித்துள்ளது என்றே கூறவேண்டும்.

மகிந்த ஜனாதிபதியாகப் பதவியேற்ற நாள் முதலே எதிர்கால சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வேயின் அனுசரணைப் பணியை நீக்கவேண்டும் என்றும், அது சாத்தியப்படாத பட்சத்தில், நோர்வேயின் சமாதானப் பணிகளுக்கான விசேட தூதுவராக இருந்த எரிக் சொல்ஹெய்ம் அவர்களையாவது அப்பதவியிலிருந்து அகற்றிவிடவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்த பேரினவாத ஹெல உறுமய பிக்குகளினதும், சமாதான விரோத ஜே.வி.பியினரதும் நிபந்தனைகளையாவது நடைமுறைப்படுத்தி, அவர்களைத் திருப்திப்படுத்துவதன் மூலம் அவர்களின் ஆதரவைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்ற அவரின் நம்பிக்கையும் சாத்தியமற்றதாகிப் போயுள்ளது.

ஏற்கனவே தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் சமாதான முயற்சிகளுக்கான அனுசரணைப் பணியை மேற்கொள்ள நோர்வேயை மீண்டும் அழைக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட ஜனாதிபதி, இந்தியாவை இந்தப் பணிக்குள் இழுத்து நோர்வே தானாக விலகிக்கொள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்த முயன்று அதில் தோல்விகாண நேரிட்டது.

அனுசரணையாளராகச் செயற்படவோ, இணைத் தலைமை நாடுகளின் அணியில் இணைந்து கொள்ளவோ மறுத்துவிட்ட இந்தியா - நோர்வேயின் அனுசரணையின் கீழ் சமாதானப் பேச்சுக்களைத் தொடருங்கள் என மகிந்தவுக்கு ஆலோசனை கூறியதுடன், அதிகபட்ச அதிகாரங்களுடன் கூடிய சமஷ்டி முறையிலான தீர்வொன்றினை ஏற்படுத்துமாறும் வலியுத்தியுள்ளமையானது மகிந்தவுக்கு மட்டுமல்ல ஏனைய பேரினவாதிகளுக்கும் ஏமாற்றம் தரும் செய்தியாகவே அமைந்துவிட்டது.

கடைசியில் எரிக் சொல்ஹெய்ம் அவர்களையாவது அனுசரணையில் இருந்து நீக்கிவிட எடுத்த முயற்சியும் நோர்வே அரசால் முறியடிக்கப்பட்டுவிட்டது. நோர்வே நாட்டின் புதிய அரசில் தற்போது பொறுப்புமிக்க ஒரு அமைச்சராக விளங்கும் சொல்ஹெய்ம் அவர்களை இலங்கையின் சமாதான நடவடிக்கைப் பணிகளுக்குப் பொறுப்பான அமைச்சராகவும் நோர்வே அரசு நியமித்துள்ளதால், சொல்ஹெய்ம் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழேயே சமாதான நகர்வுகள் முன்னெடுக்கப்படவேண்டிய அவசியமும் ஏற்பட்டுவிட்டது.

அதுமட்டுமல்லாமல் - இலங்கையின் சமாதான நகர்வுகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் நன்கு அறிந்துள்ள சொல்ஹெய்ம் அவர்கள் தனது சார்பில் செயற்பட ஒரு விசேட தூதுவரையும் நியமிக்கவுள்ளதாகவும், அவர் பெரும்பாலும் நோர்வேயின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான விதார் ஹெல்கிசனாக இருக்கக்கூடும் எனவும் பேசப்படுகிறது.

ஆக, எல்லாவகையிலும் மகிந்தர் - ஜே.வி.பி - ஹெல உறுமய கூட்டு என்பதன் எதிர்பார்ப்புகள் அனைத்தும் தற்போது ஏமாற்றம் தரும் விடயமாகவே அவர்களுக்கு அமைந்துள்ள நிலையில், விடுதலைப் புலிகளை சினமேற்றி போருக்கு அழைக்கும் மற்றொரு சதிநோக்குடன் தமிழ்மக்களுக்கெதிரான இராணுவ கெடுபிடிகளையும், ஒடுக்குமுறைகளையும் மெல்ல மெல்ல அரங்கேற்றத் தொடங்கியுள்ள அரசாங்கம் - இதன்மூலம் சமாதான முயற்சிகளைச் சிதைவுறச்செய்து, அதற்கான பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்துவதன்மூலம் சர்வதேசத்தின்முன் தன்னை நியாயப்படுத்த முனைகிறது.

இந்தச் சதித்திட்டத்தின் ஆரம்ப நகர்வாகவே வடக்கு - கிழக்கின் இன்றைய நெருக்கடி நிலையை அரசு தோற்றுவித்துள்ளது எனலாம்.

ஆனால், 'அவதந்திரம் தனக்கந்தரம்' என்ற பழமொழியினை ஜனாதிபதி உணர்ந்துகொள்வதும் அவசியமாகும்.

அதாவது, மற்றொரு போர்ச்சூழலை அரசு உருவாக்கி அதன்மூலம் அரசியல் அனுகூலம் எதனையும் பெறவிரும்புமேயானால், அதன் விளைவு முழு இலங்கையையும் முழுமையாகப் பாதிக்கவே செய்யும் என்பது வரலாற்று நியதியாகிவிடும் என்பதே இன்றைய அரசியல் மற்றும் இராணுவ களயதார்த்தமுமாகும்.

மகிந்தரின் சிந்தனை சுயமாக இயங்கப்போகின்றதா? அல்லது இரவல் யோசனைகளின் அடிப்படையில் இயங்கப்போகின்றதா?

- எல்லாம் சில வாரங்களில் தெரிந்துவிடும்!

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## சொல்லியே தீரவேண்டும்...

# கல்வித்திணைக்களங்களின் தாமதமான செயற்பாடுகளும் ஆசிரியர்களுக்கு ஏற்படும் உரிமை பாதிப்பும்!

இலங்கையில் அதிக ஊழல் நிறைந்த செயற்பாடு நடைபெறும் இடமாகவும், மந்தமான நிர்வாகச் செயற்பாடு இடம்பெறும் திணைக்களமாக கல்வித் திணைக்களம் அமைவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆசிரியரின் தொழில் வாண்மைத்துவம் மற்றும் அவர்களின் கடமைகள் திருப்தியாக அமைவதற்கு அவர்களின் தேவைகளில் திருப்தியற்ற தன்மை, பூரணப்படுத்தப்படாமை, உரிய காலத்தில் நிறைவேற்றப்படாமை, உரிமைகளை மதிக்காமை கல்வி நிர்வாக திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற பொழுது ஆசிரியர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்புக்கு உள்ளாகின்றார். இதன் காரணமாக அவருடைய கற்றல் கற்பித்தல் செயற்பாடு பாதிப்படைவது தவிர்க்க முடியாததாகின்றது.

பொதுவாக ஆசிரியர்களின் மீது கல்வி நிர்வாகச் செயற்பாடுகள் பின்வரும் வகையில் முக்கிய பாதிப்புக்களை ஏற்படுத்துவதை அவதானிக்க முடிகிறது.

1. ஆசிரியர் தர நிலைக்கு ஏற்ப உள்வாங்கப்படுதல்

2 ஆசிரியர் சேவையை உரிய காலப் பகுதிக்கு உறுதிப்படுத்தப்படாமை.

3. பதவி உயர்வுகளை உரிய காலப் பகுதிக்கு மாற்றாமை.

4. பதவி உயர்வு நிலைக்கு ஏற்ப சம்பள உயர்வு வழங்கப்படாமை.

5. ஆசிரியரின் கடன் விண்ணப்பங்களை சிபாரிசு செய்தலில் தாமதம் மற்றும் கடனை உரிய காலப்பகுதியில் வழங்காமை.

6. இடமாற்ற நடைமுறைகளை இழுத்தடிப்புச் செய்தல்.

7. ஆசிரியரின் ஆவணங்களை உரிய வகையில் பேணாமையும், திரும்பத் திரும்ப ஆவணங்களை கேட்டல்.

8. ஆசிரியரின் வருகையும், அவரின் தேவையை கருத்திற் கொள்ளலாம். மரியாதையற்ற வகையில் அதிகார முறையில் கேட்டல்.

9. ஆசிரியர், அதிபரின் ஓய்வூதியத்தைப் பெறுவதில் பல இடர்பாடுகளைச் சந்தித்து வருதல்.

இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் கல்வித் திணைக்களங்களின் சேவை குறைபாடு உடையதாகவே உள்ளது. அண்மையில் யாழ்.மாவட்டத்தில் ஓர் ஆசிரியர் ஓய்வூதியம் பெறுவதற்குச் சிரமப்பட்டு வரும் நிலையை விபரித்தமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மேலும் இங்கு பல ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தர உயர்வு மற்றும் சேவையை உறுதிப்படுத்தல், சம்பள உள்வாங்கல் ஆகிய பிரச்சினைகள் கணிசமான அளவு இருப்பதை அவதானிக்க முடிகிறது.

வருடா வருடம் கல்வி அமைச்சின் சுற்று நிருபங்கள் கல்வி நிர்வாக சேவையை சீர்ப்படுத்தும் வகையிலும், துரிதமாகச் செயற்படும் வகையிலும் வந்து போனாலும் ஆசிரியர், அதிபர் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படாமல் இருப்பது பலரையும் விசனத்துக்கு உள்ளாக்குவதுடன் கல்வி நிர்வாக அலுவலர்களின் கடமையையும், பொறுப்பையும் விமர்சிக்கச் செய்கிறது. இதனால் ஆசிரியர் பாதிப்படைவதும், அதன் காரணமாக மாணவர் கல்வி பாதிப்படைவதும், பின்னர் கல்வி அடைவு மட்டத்தில் பின்நோக்கிய நிலை ஏற்படுவதும் தவிர்க்கப்படமுடியாததாகிவிடுகிறது.

இத்தகைய கல்வி வீழ்ச்சி நச்சுவட்டத்தை கவனத்தில் கொண்டு கல்வி நிர்வாக பணியை மேற்கொள்பவர்கள் ஆவணங்களை உரிய முறையில் பேணிக் காப்பதுடன், உரிய காலப்பகுதியில் உரிய விடயங்கள் ஆசிரியர், அதிபர், பாடசாலைகளுக்கு கிடைப்பதற்கு சுறுசுறுப்பாக செயற்படவேண்டியது கல்விப் பணிமனைகளினது முக்கிய கடமையாகும்.

-யாழ்.நிரூபன்-

# எமது வரலாற்றுச் சின்னங்களை நாமே அழிக்கிறோம்



ஈழத்திருநாட்டின் வரலாற்றில் உன்னதமான சொத்துக்கள் யாவும் இன்று அழிந்தொழிந்து போய்க்கொண்டிருக்கின்றன. தமிழ் வேந்தர் காலத்து நினைவுச் சின்னங்களாக விளங்கும் யமுனா ஏரி, சங்கிலியன் தோப்பு, மந்திரிமனை போன்றவற்றைப் பேணிப் பாதுகாப்பதில் நாம் மிகவும் பின்நிற்கின்றோம். வெளிநாட்டு சுற்றுலாக்காரரும், உள்நாட்டு சுற்றுலாப்பயணிகளும் யாழ்ப்பாணத்தினது வரலாற்றுச் சின்னங்களைக் கேட்கும்போது அவற்றைக் காட்டுவதற்குரிய நிலையில் இவைகள் இல்லை. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர்கள் காலத்தில் அழித்தொழிக்கப்பட்ட சின்னாங்கள் மற்றும் ஆங்கிலேயர் காலத்தில் அழித்தொழிக்கப்பட்டவை என, எமது வரலாற்றுச் சின்னங்கள் அழிந்து கொண்டு போகும் இந்நிலையில் கண் முன்னே காட்சியளித்துக்கொண்டிருக்கும் மிக முக்கியமான இம்மூன்று தமிழ் வேந்தர் காலத்துச் சொத்துக்களை காப்பாற்ற வேண்டுமென பல தடவை பத்திரிகைகளிலும், பலதடவை மேடைகளிலும் அறிஞர்கள் பேசியும் கூட பயனற்று உள்ளது.

எந்த ஒரு நாட்டிற்குச் சென்றாலும் தம்முடைய வரலாற்றை, தம்முடைய நினைவுச் சின்னங்களை தமது நாட்டினது அரும்பொருட்காட்சிச் சாலைகளூடாக பேணிப்பாதுகாக்கின்ற வழக்கமுண்டு. இன்று யாழ்ப்பாணத்தில் சுற்றுலாப் பயணிகள் வரும்போது இங்கே எந்தெந்தப் பொருட்கள் எமது பாரம்பரியமானவை எனக் காட்ட சாதாரண ஒருகையேடு கூட இல்லாத நிலை உள்ளது. ஆனால் கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் இறங்கியவுடன் இலங்கையைச் சுற்றிப் பார்க்க விரும்பும் ஒரு சுற்றுலாப் பயணிக்கு தென்னிலங்கையில் பார்க்க வேண்டிய இடங்கள் பற்றிய கையேடுகள் விமான நிலையத்தில், கொழும்பு நகர்புற கடைகளில், கண்டிநகர்புறக் கடைகளில் விற்கப்படுகின்றன. ஆனால் யாழ்ப்பாணத்தில் பார்க்க வேண்டிய இடங்கள் பற்றிய ஒரு கையேடுகூட இன்று இல்லாது காணப்படுகின்றது. யாழ்மாநகரசபை போன்ற பிரதான நிர்வாகஸ்தர்கள் குறிப்பாக ஒருகையேடு வெளியிட்டு யாழ்ப்பாண சரித்திர பிரசித்தி பெற்ற இடங்களின் நினைவுச் சின்னங்களைப் பார்ப்பதற்குரிய ஆற்றுப்படுத்தலை இக்கையேட்டினூடாக உதவ வேண்டும்.

கையேட்டின் உள்ளடக்கத்தில் இடம்பெற வேண்டிய இடங்கள் பல இங்கு உண்டு. யமுனாஏரி, மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு, மற்றும் ஊர்காவற்றுறை கடற்கோட்டை, நெடுந்தீவு கோட்டை, யாழ் கோட்டை, சங்கானை டச்சுக்கால கட்டடம், கீரிமலை வல்லிபுர ஆழ்வார் தொன்மை போன்ற இடங்களின் செய்திகள் இக்கையேட்டில் இடம்பெற வேண்டும்.

இவற்றை பார்வையிட கூடிய வகையில் இடங்களும் புனிதப்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக யமுனா ஏரியை எடுத்துக் கொண்டால் நீண்டகாலமாக குப்பைகள் போடுகின்ற இடமாக இது விளங்குகின்றது. இதனால் இவ் ஏரி நாளுக்கு நாள் தூர்ந்து கொண்டு போகின்றது. எப்படியெல்லாம் பிரசித்தி பெற்ற இடம். இந்தநிலையில் இருப்பது மிகவேதனையைத் தருகின்றது.

இவ் ஏரியைப் பற்றி பல வரலாறுகள் சொல்லப்படுகின்றது. இவ் ஏரிக்குப் போவதற்கு இரகசிய சுரங்கப் பாதை இருப்பதாகவும் அதாவது பட்டத்து இராணி நீராடுவதற்கு சுரங்கப் பாதையினாலே சென்றதாகவும் சொல்லப்படுகின்றது. ஆனால் இவ் சுரங்கப்பாதைகள் அனைத்தும் அடைபட்டு தூர்ந்து போய் மற்றவர்கள் பார்க்க முடியாத நிலையில் உள்ளது. நல்லூரில் வாழுகின்ற ஒருவர்கூட இன்னும் யமுனா ஏரியைத் தெரியாத அளவிற்கு எமது புராதனசின்னங்கள் இன்று தேடுவாரற்று உள்ளன. இந்நிலையில் இருந்து மீள்வதற்கு இத்துறைசார்ந்த அறிஞர்கள் மாத்திரமல்ல தமிழ்மீது பற்றுக்கொண்ட அனைவரும் முயற்சிக்க வேண்டுமென்று தாழ்மையாக வேண்டிக் கொள்கின்றேன்.

செஞ்சொற்செல்வன்
ஆறு.திருமுருகன்

# காணாமற் போவோர் காணாமற் போனவர்கள் தானா...?

▲விசாரணைகள், வழக்குகள், அறிக்கைகள் ஆணைக்குழுக்களுக்கான சாட்சியங்கள் எனப் பாதிக்கப்பட்ட மக்கள் அலுத்துக் கொண்டுள்ளனர். ஆட்சியாளர்களின் அராஜகத்தை நிருபிக்கும் வகையில் உள்ள பல வழக்குகள் கால நீடிப்புக்காகக் கொழும்புக்கு மாற்றப் பட்டுள்ளன.▲

யாழ்ப்பாணம் கடந்த பத்து வருடங்களாக இராணுவ மயமாக்கப் பட்டுள்ளமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை நிரந்தரமாகவே எதிர்நோக்கி வருகின்றனர். இப்பொழுதும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். 40 ஆயிரம் படையினரை யாழ்ப்பாணத்துக்குள் முடக்கி மக்கள் இராணுவ முற்றுகைக்குள் பகடைக்காய்களாக பயன் படுத்திய பேரினவாத அரசுகளின் அநாகரீகமான மனித உரிமை மீறல்கள் மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

சாக்கடை முதல் சவச்சாலை வரை எங்கும் இராணுவம், காவலரண், வீதி மறிப்பு, சுற்றி வளைப்பு, தேடுதல், வேகக்கட்டுப்பாடு என






▲'யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவசரகால சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருக்கும் இனவாத அரசிடம் நீதி கேட்கவே பயமாக இருக்கிறது. 10 வருடங்களாகப் பல வழிகளில் போராட்டங்களை நடத்தி இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற் கொள்ளப்பட வில்லை. அரசாங்கத்தின் மீது தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்து முன்நின்று செயற்பட ஒவ்வொரு பெற்றோரும் பயப்படுகிறார்கள். தங்களது ஏனைய பிள்ளைகளும் பாதிக்கப்படுவார்களென அச்சமடைந்துள்ளனர'.▲

வீதிக்கு வந்த படையினர் மக்களைச் சீண்டி வெறுப்பேற்றத் தொடங்கினர். பலர் காரணமின்றி மோசமாகத் தாக்கப்பட்டனர். கைது செய்து காணாமற் போகும் சந்தர்ப்பங்கள் அன்றாட நடவடிக்கையாயிற்று. அன்றைய நிலை மீண்டும் தலை தூக்கியுள்ளது. ஆனால், இன்று மக்களின் எழுச்சிக் கோலங்கள் - பொங்கியெழும் மக்கள் படையாக மேலோங்கியுள்ளமை இராணுவத்தினரின் அடாவடித்தனங்களுக்கு அச்சுறுத்தலாகியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பெறுப்பேற்ற 40 நாட்களில் 90 கொலைகள், பல ஆட்கடத்தல்கள் இடம் பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தில் கடந்த பத்து நாட்களில் பன்னிரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதே வேளை பலர் கைது செய்யப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர், விடுதலை செய்யப்பட்ட போதும், ஒரு வாரத்தில் மட்டும் பதினான்கு பேரை காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப் பட்டள்ளது.

இந்நிலை தொடராமல் தடுப்பதற்கோ, கட்டுப்படுத்துவதற்கோ பொறுப்பு வாய்ந்த அலுவலகங்கள், அதிகாரிகள் இருந்த போதும், நடவடிக்கைகள் எவையும் முழுமை பெறாமையால் அவர்களது கைகள் கட்டப்பட்டுள்ளதாகவே மக்கள் கருதுகின்றனர்.

கடந்த இரு தசாப்த காலத்தில் இராணுவத் தாக்குதல்களால் 65 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுளளனர். இவர்களில் 30 ஆயிரம் பேர் காணாமற்போன பின்னர் கொல்லப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தெரிவிக்கின்றது. படுகொலைகள் மற்றும் ஆட்கள் காணாமற் போகும் சம்பவங்களால் யாழ்ப்பாணத்தில் மட்டும் 18 ஆயிரம் விதவைகள் உருவாக்கப்பட்டுள்ளனர். 1996 ஆம் முதல் 2001 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பல ஆயிரம் பேர் காணாமற்போன போதும், 600 பேரின் சாட்சியங்கள் விசாரணைக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மனிதர்கள் - இனம், நிறம், பால, மொழி, மதம், அரசியல் வேறுபாடுகள் இன்றி எல்லாச் சுதந்திரங்களையும் அனுபவிக்கும் உரித்துடையவர்கள் என்பதால் அவர்கள் வாழ்வதற்கான, சுதந்திரத்துக்கும், பாதுகாப்புக்கும், உரிமையுடையவர்கள். எந்தவொரு மனிதனையும் சித்திரவதைக்கு அல்லது கொடுமையான மனிதாபிமானமற்ற கொடுமைகளுக்கு உட்படுத்துதல் தண்டனைக்குரிய குற்றமாகும். இவ்வாறு மனித உரிமை ஆணைக்குழு வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளது.

காணாமற்போனோர் மீதான விசாரணைக் குழுவின் அறிக்கையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் பின் வரும் விடயங்களும் குறிப்பிடப் பட்டுள்ளன.

**01) சகல கைதுகள், தடுத்து வைப்புகள் மற்றும் கைமாற்றுதல்கள் அதற்குப் பொறுப்பான அதிகாரிகளினால் உடனடியாக பதிவு செய்யப்படவேண்டும்.**

**02) சகல கைதுகளைப் பற்றியும் அண்மையிலுள்ள பொலிஸ் நிலை யத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட வேண்டும். இந்தத் தகவல்களை தனியான பதிவேட்டில் பதியப்படவேண்டும்.**

**03) தடுத்து வைக்கப்பட்டோரை 24 மணித்தியாலத்துக்குள் நீதிவான் முன் சமர்ப்பிக்கும் கடமை (எந்தவித அவசர கால விதிகளின் கீழ் அது மேற் கொள்ளப்பட்டாலும் கூட) உறுதிப்படுத்தப்படவேண்டும். தடுத்து வைக்கும் இடங்களில் மாற்றம் ஏற்படின் அல்லது விடுவிக்கப்படின் அது பற்றியும் நீதிவானுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.**

**04) கைதுகளை மேற்கொண்ட இராணுவ முகாம் அல்லது பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி 48 மணித்தியாலங்களுக்குள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் அது பற்றி அறிவிக்கவேண்டும்.**

**05) கைது செய்யப்பட்டதற்கான பற்றுச் சீட்டு வழங்குதல் மிகவும் முக்கியமான தடுப்பு ஏற்பாடாகும். பற்றுச் சீட்டின் ஒரு பிரதி தடுத்து வைக்கப்பட்டவருக்கும் இன்னொரு பிரதி அவரது குடும்ப உறவினரிடமும் வழங்கப்படுதல் வேண்டும்.**

**06) மேற்கொள்ளப்பட்ட சகல கைதுகள் தொடர்பான விபரங்களை வாராந்தம் இராணுவமுகாம் அல்லது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளருக்கு அறிவிக்க வேண்டும்.**

இவை தொடர்பான இன்னும் பல விதிமுறைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. படையினர், பொலிஸார் இந்த விதிமுறைகளை மதிப்பதாகவோ, நடைமுறைப்படுத்துவதாகவோ இல்லை. பொறுப்பு வாய்ந்த நிறுவனத்தால் மனித உயிர்களை மதித்து நடைமுறைப்படுத்தவெனக் கொண்டு வரப்பட்ட விதிமுறைகளை இலங்கையின் படைத்தரப்பு மீறுகின்றதென்றால், இதற்குப் பின்னணியில் அரசியல் தலையீடுகள் இருக்கலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் வலுப்பெறுகின்றது.

பொதுவாக ஒவ்வொரு காணாமற்போன சம்பவத்திலும் கைக் கடிகாரம், பணம், நகைகள், வாகனம் என தனிப்பட்ட உடமைகளும் காணாமற்போயின. ஒரு நபரைக் கைது செய்ய சட்ட ரீதியான காரணங்கள் இருப்பினும், அவரது தனிப்பட்ட உடமைகளை கைப் பற்றுவது சட்டவிரோதமானதாகும். ஆனால், இதுவே கடந்த காலங்களில் நடைமுறையில் காணப்பட்டது இதற்கு உயர் அதிகாரிகளும் உடந்தையாக இருந்துள்ளனர். காணாமற்போனவர்களில் அனேகர், தனிப்பட்ட உடமைகளை அபகரிப்பதற்காகவே கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக காணாமற் போனோர் மீதான விசாரணைக் குழுவினர் சந்தேகம் கொண்டுள்ளனர்.

1996 ஆம் ஆண்டு யூலை மாதம 31 ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட மீசாலையைச் சேர்ந்த 21 வயது இளைஞன் சர்வதேச மன்னிப்புச் சபையிடம் தன் அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டார்.

"இராணுவத்தினர் நான் கீழே விழும்வரை துப்பாக்கியால் அடித்தனர். நான் விழுந்த பின்னர் கைகள் இரண்டையும், கால்கள் இரண்டுடனும் சேர்த்துக் கட்டினார்கள். அதன் பின்னர் பிளாஸ்ரிக் பையினால் முகத்தை மூடினார்கள். அதனால் சரியாக சுவாசிக்க முடியாது போகவே நிலத்தில் வீழ்ந்து உருண்டேன். அதன் பின்னர் எனது கழுத்தைச் சுற்றி ஒரு துணியைப் போட்டு இரு தலைப்பினையும் இழுத்து நெரித்தனர். பின்னர் துவக்கின் நுனியில் இருக்கும் கத்தியால் வெட்டினார்கள். ஒரு சிப்பாய் என் முதுகின் பல இடங்களில் கத்தியால் குத்தினார்."

"கழுத்தைக் கத்தியால் வெட்ட முயன்றனர். அவ்விடத்தில் துணி இருந்ததால் காயம் ஏற்படவில்லை. பின்னர் அவர்களுள் ஒருவர் எனது தலையில் இரண்டு இடங்களில் வெட்டினார். அதனால் தலையில் ஆழமான காயங்கள் ஏற்பட்டன. அத்தருணத்தில் எனக்கு நினைவே இழப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது."

"அப்போது நான் அணிந்திருந்த இரண்டு தங்க மோதிரங்களை அவர்கள் கழற்ற முயல்வது போல் தோன்றியது. மோதிரங்கள் கழற்ற முடியாமல் போகவே அவ்விரல்களைக் கத்தியால் வெட்டினர். நான் நினைவை இழந்தேன். எனக்கு மயக்கம் தெளிந்த போது இருண்டு இருந்தது. ஒரு மலக் கிடங்கினுள் அரைவாசி புதைந்தபடி கிடந்தேன். அக் கிடங்கில் இருந்த பூச்சி, புழுக்கள் எனது வெட்டுக்காயங்களைக் கடித்தன. நான் கூக்குரலிட்டேன்."

"சோதனைச் சாவடியில் இருந்த இராணுவம் இரவில் தமது முகாம் களுக்குத் திரும்பினர். எனது சத்தம் அயலிலுள்ள வீடுகளுக்குக் கேட்டுள்ளது. அடுத்தநாள் பெற்றோர் என்னைத் தேடிவந்த போது அயலவர்கள் சத்தம் கேட்டதாகக் கூறிய திசையில் வந்து என்னை மலக் குழிக்குள் இருந்து மீட்டு மருத்துவ உதவிகளைச் செய்தனர். இதனாலேயே நான் உயிர்வாழ்கிறேன் என்று அந்த இளைஞன் குறிப்பிட்டுள்ளான்."

வேலைக்குப் போன தனது 18 வயது மகன காணாமற்போய் 10 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் மகன் வருவான் எனக் காத்திருக்கும் செல்வராசா கனகாம்பிகை கூறியவை -

"யுத்த நிறுத்தம் அமுல்படுத்தப் பட்டுள்ள நிலையில், அவசரகால சட்டத்தை நடைமுறைப்படுத்தி இருக்கும் இனவாத அரசிடம் நீதி கேட்கவே பயமாக இருக்கிறது. 10 வருடங்களாகப் பல வழிகளில் போராட்டங்களை நடத்தி இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் மேற் கொள்ளப்பட வில்லை. அரசாங்கத்தின் மீது தொடர்ச்சியாக அழுத்தங்களைக் கொடுத்து முன்நின்று செயற்பட ஒவ்வொரு பெற்றோரும் பயப் படுகிறார்கள். தங்களது ஏனைய பிள்ளைகளும் பாதிக்கப்படுவார்களென அச்சமடைந்துள்ளனர்".

"இன்றைய அரசாங்கத்திடம் ஏதோ ஒரு வகையில் மிக விரைவாகக் கதைக்கவுள்ளோம். இவர்களது இழுத்தடிப்புக்கள் தொடருமானால் சர்வதேச சமூகத்திடம் நீதி கேட்டுப் போராடவுள்ளோம்".

"மகன் கோபிராஜ் காலை 9 மணி இருக்கும் யாழ். நகருக்கு வேலைக்குப் போனவர். மகனை கைது செய்த இராணுவத்தினர் எனது வீட்டிற்கு அருகிலுள்ள முகாமில் வைத்திருந்தனர். என்னுடைய மகனுக்கு ஆமியின் உடுப்பைப் போட்டு இராணுவ வாகனத்தில் ஏற்றி, எங்களுடைய வீட்டிற்கு முன்பாகக் கொண்டு போகும் போது மகன் அம்மா எனக் கத்தினான். ஓடி வந்து பார்த்த போது மகனை படையினர் கொண்டு சென்றனர்" எனக் குறிப்பிட்டார் கனகாம்பிகை.

தும்பளை இலட்சுமணன் தோட்டத்தைச் சேர்ந்த நவரத்தினக் குருக்கள்- யோகேஸ்வரி தன் மகன கோணேஸ்வரக் குருக்கள் (ரமண ஐயா) காணாமற் போனது தொடர்பாகக் கூறியவை.

1996 ஆம் ஆண்டு மீசாலைக்கு பேரனைப் பார்க்கப் போனவர் அங்க போயிற்று திரும்பி வரேக்க தான் ஆமி பிடிச்சது. பலாலி இராணுவ முகாம் முதல் சகல இராணுவ முகாங்களிலும் தேடியாச்சு. ஒரிடமும் இல்லை என்றே சொல்லினம். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருக்கிறம்.

விசாரிக்கிறம், தேடுறம் எனச் சொல்கிறார்களே தவிர, இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் ஒருவரும் மேற்கொள்ள வில்லை. எனது மகனுடன் பிடிபட்டவர், தான் ரமண ஐயாவுடன் 15 நாட்களிற்கு மேல் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் தன்னை வேறு இடத்திற்கு மாற்றியதாகவும், ஐயா சாப்பாடு முதல் சகல விடயங்களிலும் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கிக் கொண்டிருந்தவர் எனக் குறிப்பிட்டார் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்பட்ட இளைஞர்.

"எங்கட வீட்டை வித்தியாசமான ஆட்கள் யாரும் வந்தால் மகனைப் பற்றி தான் கதைக்க வந்திருக்கிறார்கள் என்ற எண்ணமே எனக்குள்ளது. எங்களிற்கு நிவாரணமோ, வேறு உதவிக் கொடுப்பனவுகளோ தேவையில்லை. மகன் இருக்கிற இடத்தை சொன்னாலேபோதும். கடந்த பத்து வருடங்களாக எத்தனையோ கடிதங்களை அனுப்பியிருக்கிறம். இந்தக் கடிதங்கள் எல் லாம் அதிகாரிகளின் கைதுடைக் கும் கடதாசியாகவே மாறியுள்ளது.

எங்களுக்கு எங்கட பிள்ளைகள் வேணும். அரசாங்கம் நீதி வழங்காவிட்டால் சர்வதேச சமூகத்தின் ஊடாக சர்வதேச நீதிமன்றத்தில் நீதி கேட்டு, வழக்குப் போட்டாவது ஒரு முடிவு காணவேணும் எனக் குறிப்பிட்டார் யோகேஸ்வரி.

விசாரணைகள், வழக்குகள், அறிக்கைகள் ஆணைக்குழுக்களுக்கான சாட்சியங்கள் என பாதிக்கப்பட்ட மக்கள் அலுத்துக் கொண்டுள்ளனர். ஆட்சியாளர்களின் அராஜகத்தை நிருபிக்கும் வகையில் உள்ளபல வழக்குகள் கால நீடிப்புக்காகக் கொழும்புக்கு மாற்றப் பட்டுள்ளன.

மன்னாரில் பாலியல் வல்லுறவுக்குப் பின்னர் சுட்டுக் கொல்லப் பட்ட காமலிற்றாவின் வழக்கு, செம்மணிப்புதைகுழி வழக்குகள் எனப் பல வழக்குகள் கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளன. இவ் வழக்குகளில் சம்மந்தப்பட்ட படையினர், வழக்கை நடத்துகின்ற பொலிஸார், அவர்கள் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகின்ற போதும் பாதிக்கப்பட்டவர்கள் ஆஜராவதில்லை. இந்நிலை தொடர்வதனால் குற்றவாளிகளைச் சரியான முறையில் தண்டிக்கமுடியவில்லை எனச் சம்பந்தப்பட்டவர்கள் குறிப்பிடுகின்றனர். செம்மணிப் புதைகுழியில் 16 சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்ட போதும், 6 சடலங்கள் மட்டுமே இனம் காணப்பட்டுள்ளமையும் இங்கு நினைவு கூரப்பட வேண்டியது.

தெரிந்தது போக மறைந்து கிடப்பது பலவாக ஏராளமான புதை குழிகள் கடந்த காலங்களில் உருவாகின. இவற்றின் முழுமையான விபரங்களை இதுவரை யாரும் முன்வைக்க வில்லை. மனித உரிமைகள்,மனித நேய அமைப்புக்கள் இயங்கி வருகின்ற போதும், இவர்களாலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள முடியவில்லை என மக்கள் ஆதங்கப் படுகின்றனர். அவைகள் வெறும் பதிவுகளை மேற்கொண்டு மௌனம் காக்கும் அமைப்புகளாகவே இருப்பதால் அவற்றின் மீதான மக்களின் நம்பிக்கை அறவே இல்லாது போய் விட்டது என்பதே உண்மையாகும்.

ஈழவன்

# ஈவிரக்கமின்றி தாக்குதல் தொடர்ந்தால் மாணவர் போராட்டம் வெடிக்கும்!

## யாழ் மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம் —

தமிழ்மாணவர்கள் மீது இராணுவம் ஈவிரக்கமின்றி கண்மூடித்தனமாக தொடர்ந்தும் தாக்குதல்களை நடத்துமானால் மாணவர்கள் சுயபாதுகாப்பை உறுதிப்படுத்தும் நிலைக்கு வலிந்து தள்ளப்படுவார்கள் என யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

திருகோணமலையில் மாணவர்கள் மீது இராணுவத்தினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது நேற்றைய தினம் திருகோணமலை தமிழ் மாணவர்கள் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பாளர்களால் குண்டு வீசியும் சுடப்பட்டும் மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் ஒட்டுமொத்த தமிழ் மாணவர்களையும் தமிழ் மக்களையும் கடும் கோபத்துக்கு உள்ளாக்கியிருப்பதோடு, தமிழ் மாணவர்கள் தங்கள் கல்வியை தொடருவதில் பாரிய சிக்கல்களையும் உருவாக்கியுள்ளது.

இந்த இன வெறியர்களின் காட்டுமிராண்டித்தனமான, கோழைத்தனமான செயலை தமிழ் மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கடந்த சில நாட்களாக வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் சிங்களஇன வெறியர்களும் அவர்களோடு கூட்டு வைத்துக்கொண்டு அலையும் ஒட்டுப் படைகளும் தமிழ் இளைஞர்களையும் மாணவர்களையும் அழித்தொழிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றனர்.

இவ்வாறான நெருக்கடியான சூழலில் புதிய வருடத்தில் இயல்பு வாழ்வுக்கு மக்கள் ஓரளவு திரும்பிக் கொண்டிருக்கையில் சிங்களப்படைகளின் கொலைப்படலம் கிழக்கில் அரங்கேறியுள்ளமையானது மாணவர் மத்தியில் பலத்த விசனத்தினை ஏற்படுத்தியுள்ளது. புதுவருடம் பிறந்து மறுநாள் இரவே திருகோணமலை காந்திசிலைக்கருகில் நிகழ்ந்த அசம்பாவிதத்தை அடுத்து அவ்விடத்தில் கூடுகின்ற அப்பாவித்தமிழ் மாணவர்கள் மீது சிங்கள இனவெறிக்காடையர்கள் மேற்கொண்ட ஈவிரக்கமற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் ஐந்து மாணவர்கள் சம்பவ இடத்திலேயே துடிதுடித்துப் பலியானார்கள். மேலும் ஐவர் சம்பவத்தில் படுகாயமடைந்தனர்.

இப்படுகொலைச் சம்பவமானது எமக்கு ஆழ்ந்த துயரையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றது. இதனை தமிழ் மாணவர் ஒன்றியமானது வன்மையாகக் கண்டிக்கின்றது. எதிர்வரும் நாட்களில் இதுபோன்ற ஈனச்செயல்கள் இடம்பெறுமாக இருந்தால் தமிழ் மாணவர் தமது சுயபாதுகாப்பை உறுதிப்படுத்தும் நிலைக்கு வலிந்து தள்ளப்படுவார்கள் என்பதனை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழ் மாணவர்களுடைய அகிம்சை ரீதியான கோரிக்கைகளுக்கு சர்வதேசத்தினதும் சிங்கள அரசினதும் சற்றும் செவிசாய்க்காத நிலை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

# அதிபருக்கெதிராக ஆசிரியை முறைப்பாடு

யாழ்ப்பாணம் —

வேலணை தெற்கு, ஐயனார் வித்தியாலய அதிபருக்கு எதிராக ஆசிரியை ஒருவர் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

ஆசிரியை ஒருவரின் இடமாற்றம் தொடர்பான விண்ணப்பத்தை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு இரண்டாவது தடவையாகவும் அனுப்பி வைக்காமை பற்றி குறித்த ஆசிரியை அதிபரைக் கேட்டபோது தகாத வார்த்தைகளால் பேசியதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் மீது ஆசிரியை தெரிவித்துள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக அதிபரிடமிருந்தும் மேற்படி ஆசிரியையிடமிருந்தும் விசாரித்து இந்த விடயம் தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறும் மனித உரிமை ஆணைக் குழு கோரியுள்ளது.

இதேவேளை, ஆசிரியையின் இடமாற்றப் படிவத்தை நிராகரிக்கும் அதிகாரம் அதிபருக்கு இல்லை என்பதுடன், ஆசிரியை ஒருவரை தமக்கு வாய்க்கு வந்தபடி தகாத வார்த்தையால் பேசுவது அடிப்படை மனித உரிமையை மீறும் செயல் எனவும் கூறப்படுகின்றது.


## கண்ணீர் அஞ்சலி



வைத்திய கலாநிதி
பேரம்பலம் பத்மநாதன்
அவர்களின் துணைவியார்
திருமதி பத்மநாதன் நளினி

அவர்களின் பிரிவுத்துயர் கேட்டு வேதனை அடைவதுடன், இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

– நண்பர்கள் –

(சி/4990)



## கண்ணீர் அஞ்சலி



வைத்திய கலாநிதி
பேரம்பலம் பத்மநாதன்
அவர்களின்
பாசமிகு துணைவியார்
திருமதி பத்மநாதன் நளினி

அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து அவரின் பிரிவுத் துயரில் குடும்பத்தினருடன் பங்கெடுத்து அவரின் ஆன்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- ஏழாலை வாழ் மக்கள் -

(சி/4991)



## திருமறைக் கலாமன்றம்

40ஆவது ஆண்டு நிறைவில் கலைப்பயில்வில் ஓர் புத்துருவாக்கம்

## கலைத்தூது அழகியல் கல்லூரி

KALAITHUTHU COLLEGE OF AESTHETIC

1988ஆம் ஆண்டில் இருந்து எமது மன்றத்தால் நடத்தப்பட்டு வந்த "கவின்கலைகள் பயிலகம்" இவ்வாண்டு (2006) முதல் "கலைத்தூது அழகியல் கல்லூரி"யாக இயங்கவிருக்கின்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம். கலைசார்ந்த பாடங்களை செயல் திறனுடன் பயில்வதற்கும், தகுதிச் சான்றிதழ்களைப் பெறுவதற்கும் ஏற்ற வகையில் இதன் பாடவிதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

இக்கல்லூரியில் பயில்வதற்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பாடவிதானங்கள்

**பிரதான பாடங்கள்**
- வாய்ப்பாட்டு
- நடனம் (பரதம்)
- நடனம்(கதகளி)
- வீணை
- வயலின்
- கிற்றார்
- ஓர்கன் (கீ போட்)
- புல்லாங்குழல்
- மிருதங்கம்
- சித்திரம்
- நாடகமும் அரங்கியலும் (நாடகப்பயிலகம்)

**சிறப்புப் பாடங்கள்**
- கூத்து
- கண்டிய நடனம்
- சினிமாவும், தொழில்நுட்பமும்

### குறிப்புக்கள்
* ஒவ்வொரு பாடவிதானங்களுக்கும் ஒவ்வொரு குறிப்பிட்ட கலைத் திட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டு தரங்களின் அடிப்படையில் பயிற்சிகள் நடத்தப்படும்.
* அறிமுறை, செய்முறை இரு வகையிலும் வகுப்புகள் நடத்தப்படும்.
* வார இறுதியிலும் (சனி, ஞாயிறு) மாலை நேரங்களிலும் வகுப்புகள் நடத்தப்படும்.
* வட இலங்கை சங்கீத சபை, க.பொ.த பரீட்சைகள் போன்றவற்றுக்குத் தோற்றுவோருக்கு இப்பயில்வுகள் 'செய்முறை' சார்ந்து அதிகம் உதவுவதாக இருக்கும்.
* சிறப்புப் பாடங்களுக்கு விசேட விரிவுரையாளர்கள் வருவிக்கப்படுவதுடன், விசேடமான கால ஒழுங்கில் பயிற்சிகள் நடத்தப்படும்.
* அனைத்துப் பாடங்களுக்குமான விண்ணப்ப முடிவுத்திகதி 14.01.2006 ஆகும்.
* விண்ணப்பப் படிவங்களை யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 2393

பொதுச்செயலாளர்,
திருமறைக் கலாமன்றம்.

(C/4984)



## 20ம் ஆண்டு நினைவஞ்சலி



பற்றிக் இம்மனுவேல்
பற்றிமா ராணி - மதுரம்

தோற்றம் 18.02.1946
மறைவு 04.01.1986

பெற்றெடுத்துப் பெயருமிட்டு
வாழவைத்தாயே,
நாம் வாழ்கையில்
உம்மை வாழவைத்துப்
பார்க்க பாவிகள் நாம்
கொடுத்து வைக்கவில்லையே.
ஏங்குகிறோம், வணங்குகிறோம்
என்றென்றும் உம்மையே
தெய்வமாய்.....

பிள்ளைகள்
டெறிக்,பெலின்டா,
விறெட்றிக்,
லொறின்டா,பென்றிக்

மருமக்கள்
பற்றீசியா நிலாணி,
யூட்பற்றிக் றாம்சே

பேரப்பிள்ளைகள்
பியற்றிக், பியற்றீசியா

துயருறும்
கணவன்
பற்றிக் இம்மனுவேல் (துரை)

*"மதுரம்" / "றோசவனம்"*
*சில்லாலை.*

(C/4983)



## நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

அர்ஜுன், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த
ஆணை

எமது மகத்தான பொங்கல் வெளியீடு!
அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்

காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)

## ராஜா யாழ்ப்பாணம்




காட்சிகள்:-10.30,2.00மட்டும் (பு.நேரம்)

## மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக
சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



ஆறு

காட்சிகள்
10.30, 1.30, 4.30, 7.30, 10.30

## நிறைஞ்சனாஸ் சங்கானை

பிரசன்னா, லைலா மற்றும் பலர் நடித்த
கண்டநாள் முதல்

காட்சிகள் 11.00, 2.00, 5.00 (புதிய நேரம்)



## பணிநிலை வெற்றிடங்கள்

செயல்திறன் அரங்க இயக்கம் நடைமுறைப்படுத்தும் உளசமூக மற்றும் நாடக அரங்கச் செயற்திட்டங்களில் உள்ள பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. நாடகத்துறை பயிற்றுவிப்பாளர் / போதனாசிரியர் (02 பேர்)**

*தகைமை:* சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய துறைகளில் பட்டம் பெற்றிருத்தல் / வட இலங்கை சங்கீதசபையினால் நடத்தப்படும் 5 ம், 6 ம் தர பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
நாடகத்துறை அனுபவம்.
கொடுப்பனவு 9000/=

**2. இணைப்பாளர் (ஒருவர்) - உளசமூக மேம்பாட்டுச் செயற்பாடு**

*தகைமை :* A/L சித்தியடைந்திருத்தல், மேலதிக கல்வித்தகைமைகள் அத்துடன் இவ்வேலைத்திட்டத்தில் கடமையாற்றிய அனுபவம் விரும்பத்தக்கது.
சமூக சேவையில் முன்னனுபவம்.
களநிலையில் வேலை செய்யும் ஆர்வம், உடல் ஆரோக்கியம், மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.
கொடுப்பனவு ரூ.10000/=

**3. களநிலை உத்தியோகத்தர் (ஒருவர்)**

*தகைமை :* A/L சித்தியடைந்திருத்தல்.
மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல்.
கொடுப்பனவு ரூ. 8000/=

**விண்ணப்ப முடிவுத் திகதி : 10.01.2006**

விண்ணப்பங்கள் யாவும்
இயக்குநர்,
செயல்திறன் அரங்க இயக்கம்,
அருளகம், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

*நிர்வாக / மனிதவள முகாமையாளர்*
*செயல்திறன் அரங்க இயக்கம்.*

(சி/4988)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இந்தியாவின் ஆதரவைப்பெறுவதில் ஜனாதிபதி தோல்வியடைந்துள்ளார்!

ராஜித சேனாரத்ன



கொழும்பு —

விடுதலை புலிகளுடனான பிரிவினைவாத ஆயுதப்போராட்டம் தொடர்பான தனது கொள்கைகளுக்கான இந்தியாவின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முயற்சியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்து விட்டதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஜனாதிபதியின் நான்கு நாள் இந்தியவிஜயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன - இலங்கையின் இனவிவகாரத்துக்குத் தீர்வுகாணும் நோக்கிலான தனது கொள்கைகளுக்கு இந்தியாவின் அங்கீகாரத்தைப் பெற அவர் எடுத்த முயற்சி அவருக்கு வெற்றியை அளிக்கவில்லை.

ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு காண முயலும் அவரது கொள்கையை நிராகரித்த இந்தியத் தலைவர்கள் - விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வுகாணுமாறு வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்தியாவின் கொள்கைகள் ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டினை ஒத்ததாகவே உள்ளன. இந்தியத் தலைவர்கள் தமிழ்நாட்டின் அரசியல்வாதிகளின் கொள்கைகளுக்குக் கட்டுப்பட்டுள்ளனர்.

அத்துடன், தமிழ்நாடு ஜனாதிபதியை ஆதரிக்கத் தயாராக இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# வல்வெட்டித்துறை வடகடலில் மீன்பிடிக்க படையினர் தடை!

வடமராட்சி —

வல்வெட்டித்துறை கடற்பகுதியில் மீனவர்களை கடற்தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என இராணுவத்தினர் தடைவிதித்துள்ளதாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளதுடன், மேற்படி விடயம் தொடர்பாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்துள்ளனர்.

வல்வெட்டித்துறை வடக்குப் பகுதியில் உள்ள மீனவ சங்க பிரதிநிதிகளை தமது முகாமுக்கு அழைத்த இராணுவத்தினர், மீனவர்கள் கடற்தொழிலுக்குச் செல்வதால் கடற்படையினருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே மீனவர்கள் எவரும் கடற்தொழிலுக்குச் செல்லமுடியாது. இந்த விடயம் தொடர்பாக விரைவில் அரச வர்த்தமானியில் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தாம் கடற்தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும், இதற்கான தகுந்த நடவடிக்கை ஒன்றினை மேற்கொண்டு தாம் மீண்டும் சுதந்திரமாக கடற்தொழிலுக்குச் செல்வதற்கான அனுமதியைப் பெற்றுத்தருமாறு தொழிலாளர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

# வவுனியா நலன்புரியிலிருந்த 8 தமிழ் இளைஞர்கள் கைது

வவுனியா —

வவுனியா செட்டிகுளம் அடம்பன்குள நலன்புரி முகாமில் தங்கியிருந்த எட்டு தமிழ் இளைஞர்கள் கடந்த 26ம் திகதி தமிழ் மக்கள் படையினரால் கைது செய்யப்பட்டு, அநுராதபுரத்தில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தந்திரிமலைப்பகுதிக்கு மாங்காய் பறிக்கச் சென்ற போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த 31ம் திகதி முதல் சச்சிதானந்தன் சித்திரிகா என்ற இளம் பெண்ணைக் காணவில்லை என்றும் வவுனியா மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (01)

# கொழும்பு பாதுகாப்பு குறித்து அச்சமடையத்தேவையில்லை

## பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு —

கொழும்பு நகரில் நேற்று முதல் அதிதீவிரமாக பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக கொழும்பு பிராந்தியத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்தார்.

நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்தஅவர் - தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

அண்மைநாட்களாக மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் நோக்கம் கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வது தான். எனவே, கொழும்புப் பிரதேசத்தின் பாதுகாப்பு நிலைமை குறித்து எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. தற்போது உயர் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நாம் அவதானத்துடனேயே செயற்படுகிறோம்.

இராணுவத்தினர், இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், சிவில் உடையில் பொலிஸார் ஆகியோர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொடர்ந்தும் நாம் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ள இருக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் வர்த்தகர் சுடப்பட்டார்!

கொழும்பு —

கொழும்பு - வெள்ளவத்தைப் பகுதியில் நேற்றிரவு வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் தமிழ் வர்த்தகர் ஒருவர் படுகாயமடைந்தார்.

பாலேந்திரன் என்ற தமிழ் வர்த்தகரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி களுபோவில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

# புலிகளின்...

பயணித்துக் கொண்டிருக்கும் போது இராணுவத்தினர் ஊடுருவித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

பிற்பகல் 4.00மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இவருடன் கூடப்பயணித்த இவரது உதவியாளராகிய நாடடுப்பற்றாளர் தேவராசா வினோதன் என்பவரும் வீரச்சாவடைந்துள்ளார் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இருவேறு...

இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பில் நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 2 படையினர் படுகாயமடைந்தனர்.

மட்டக்களப்பு நகர பார் வீதியில் இராணுவக் காவலரணில் இருந்த படையினர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இந்தத் தாக்குதலை நடத்தினர்.

காயமடைந்த சிப்பாய்களான அனில்குமார நந்தசேன (வயது 24), பியசேன திலினகுமார (வயது 20) ஆகியோர் மட்டக்களப்பு வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

கைக்குண்டுத் தாக்குதலையடுத்து அந்தப் பகுதியில் பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

# மக்களின்...

கடற்படையினரும் அவர்களுடன் சேர்ந்து இயங்கும் ஒட்டுப்படைகளினதும் கொலைச் சம்பவங்களும், கடத்திச் செல்லும் சம்பவங்களும் நாளுக்குநாள் அதிகரித்து வருவதுடன் நேற்றுமுன்தினம் ஐந்து அப்பாவி மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதனையடுத்து பொங்கியெழுந்த மக்கள் நேற்றுக்காலை திருகோணமலை நகர்ப்பகுதியில் சாரதா வீதி, ராஜவரோதய வீதி, கட்கிசன் வீதி, மின்சாரநிலைய வீதி, கடல்முக வீதி ஆகியவற்றிலிருந்த கடற்படையினரின் காவலரண்களை இடித்து அழித்தனர்.

மக்களின் இந்தச் செயலால் மேற்படி காவலரண்களில் இருந்த கடற்படையினர் பின்வாங்கிச் சென்றதுடன், நேற்று மாலைவரை இந்தக் காவலரண்களுக்கு வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (04)

# இராணுவ...

ஆகிய கோஷங்கள் உரத்து எழுப்பப்பட்டன. சிங்களவருக்கு இந்திய அரசு எந்த உதவியும் வழங்கக் கூடாது! தமிழீழத்தை அங்கீகரி! ஆகிய ஈழத் தமிழர் ஆதரவு பதாகைகளை ஆண்களும் பெண்களும் கைகளில் ஏந்தியிருந்தனர்.

இந்த ஆர்பாட்டத்துக்கு சென்னை பொலிஸார் ஒரு மணிநேரம் மட்டுமே அனுமதியளித்திருந்தனர். தமிழனுக்காக அழுவதற்குக் கூட நேரக் கெடு விதிக்கின்ற அவலச் சூழல் தமிழ் நாட்டில் இருப்பதைக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசியோர் சுட்டிக்காட்டினர்.

ஈழத்தமிழர்களைப் படுகொலை செய்து வரும் சிங்கள அரசுக்கு இந்திய அரசு எதுவித உதவியையும் எந்த நிலையிலும் வழங்கக்கூடாது. அமைதிப் பேச்சுக்களில் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையிலான பங்களிப்பைச் செய்ய வேண்டும். அப்பாவித் தமிழர்கள் மீதான சிங்கள இராணுவப் படுகொலைகளை உடன் நிறுத்த இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கூட்டத்தில் உரையாற்றியோர் வலியுறுத்திப் பேசினர்.

# மாணவர்கள் கொலையை...

இந்த அழைப்பினை திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையும், பொங்குதமிழ் சமூகமும் விடுத்துள்ளன. இந்த ஐந்து மாணவர்களது மரணங்களும் - குண்டுவெடிப்பினாலும், துப்பாக்கிப் பிரயோகத்தினாலுமே இடம்பெற்றதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தம்மைப் பிடித்த கடற்படையினர் தம்மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதிலேயே ஐந்து மாணவர்கள் கொல்லப்பட்டதாக காயமடைந்த மாணவன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது - சம்பவம் இடம்பெற்ற கடற்கரை வீதிக்கு நாம் செல்வது வழக்கமாகும். நேற்று முன்தினமும் அவ்வாறு அங்கு சென்றவேளை அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் எம்மை பிடித்துச் சென்றனர்.

இவ்வாறு எம்மைப் பிடித்துச் சென்ற கடற்படையினர் எம்மீது 20 நிமிடங்கள் விசாரணை நடத்திய பின்னர் - தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டதெனத் தெரிவித்து எம்மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் எனது சகமாணவர்கள் ஐவர் உயிரிழந்ததுடன் நாம் இருவரும் காயமடைந்தோம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, உயிரிழந்த மாணவர்களின் சடலங்களை வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க பொலிஸார் மறுத்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் என உறவினர்கள் கையொப்பமிட்டாலே சடலங்கள் தரப்படுமெனத் தெரிவித்த பொலிஸார் - பொதுமக்கள் மற்றும் தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பை அடுத்து சடலங்களை உறவினர்களிடம் கையளித்தனர்.

இதன்பின்னர் வைத்தியசாலையிலிருந்து ஐந்து மாணவர்களின் சடலங்களும் உறவினர்களால் அவர்களின் இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இவர்களது சடலங்கள் நாளை வியாழக்கிழமை திருகோணமலை இந்துக் கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்படும்.

பின்னர் தியாகிகள் அரங்கில் வைக்கப்பட்டு, இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்று இறுதி நிகழ்வுகளுக்காக ஒன்றாக எடுத்துச் செல்லப்படவுள்ளன.

மாணவர்களின் இறுதி நிகழ்வுகளின் பின்னர் திருகோணமலையிலிருந்து இராணுவத்தினர் முற்றுமுழுதாக வெளியேறும் வரை தொடர்ச்சியான கதவடைப்புக்கு திருமலை தமிழ் மக்கள் பேரவை, பொங்கியெழும் மக்கள் சமூகம் ஆகியன அழைப்பு விடுத்துள்ளன.

இதேவேளை, மாணவர்களின் படுகொலையை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, மாணவர் சமூகம் உட்பட பல்வேறு அமைப்புகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன. (04, 10)

A/L - 2008
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி - 7
சனி காலை 8 மணி
D.M.I
Jaffna.
(C/4978)

## மரண அறிவித்தல்

### திருமதி பத்மநாதன் நளினி



ஏழாலை மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் நளினி (03-01-2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் வைத்திய கலாநிதி பேரம்பலம் பத்மநாதன் (செல்லமணி) அவர்களின் பாசமிகு மனைவியும், ஏழாலை மேற்கு திரு .திருமதி ந. திருஞானச்செல்வம் தம்பதியினரின் பாசமிகு மகளும், ஏழாலைமேற்கு சித்தவைத்திய பேரறிஞர் திரு.திருமதி ஐ.பேரம்பலம் தம்பதியினரின் மருமகளும், திரு.ப. குமரகுருபரன் (அபிவிருத்தி உதவியாளர்,யாழ்.போதனா வைத்தியசாலை), திரு ப.கோகுலரமணன் (பிரான்ஸ்), திருமதி செல்வபாரதி மதிவண்ணன் (கனடா), செல்வி ப.பவதாரணி (மாணவி, லங்கா சித்தஆயுள்வேதக் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திரு.தி.மதிவண்ணன்(கனடா), திருமதி கு.பிரதீபா ஆகியோரின் அன்புமிகு மாமியாரும், செல்வி. ம.சாயிகிருத்திகா அவர்களின் பாசமிகு பேத்தியும், திரு.தி .ஆனந்தநடேசன் (கோறல் ரேஸ்ரி, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புச்சகோதரியும் திருமதி ஆ.விஜயகலா அவர்களின் ஏகமைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (04.01.2006) புதன்கிழமை பகல் 1.00மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக ஏழாலை, உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈஸ்வரஜோதி,
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

(C/4989)

தகவல் :
வைத்திய கலாநிதி பேரம்பலம்
பத்மநாதன் (கணவர்)

DCM
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A.L 2008
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - பாலவாசன்
வணிகக்கல்வி - உமாகாந்த்
தமிழ் - தமிழீந்திரன்
இந்து நாகரீகம் - ஸ்ரீஸ்
புவியியல் - குமரன்
அளவையியல் - சுதன்
ஆங்கிலம் - நிஷாந்தன்
ஆரம்பம் :- 07.01.2006 சனி 8.00 (ப.நே)

A/L 2008
மாலை நேர வகுப்புக்கள்
வர்த்தகப் பிரிவு
பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - பாலவாசன்
வணிகக்கல்வி - உமாகாந்த்
ஆரம்பம் : 05-01-2006 வியாழன் 4.00 (ப.நே)
DCM
(C/4982) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/4982)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்ட